Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-21 | 06-08-2005 | சனிக்கிழமை | ஓசை-169


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
உரிமையாளர்:-
S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12426)

# சிங்களதேசம் தீர்வு தரப்போவதில்லை

# சர்வதேச முயற்சிகளுக்கும் மதிப்பில்லை!

## தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர்

## விதார் ஹெல்கேசனிடம் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

*தென்னிலங்கைத் தலைமையோ, சிங்கள தேசமோ தமிழ்மக்களுக்கும், தேசத்திற்கும் ஒரு தீர்வைத்தரும் என்பதை எங்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளமுடியாத நிலை உருவாகியிருக்கின்றது. சர்வதேச பிரசன்னத்தின் அடிப்படையில் அவர்களின் முயற்சியில் கூட சிங்களத் தலைமைகள் எந்த அக்கறையுமில்லாமல்,மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக்கொடுக்க அர்ப்பணிப்புடன் செயற்படாத நிலைதான் மூன்றுவருடங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது என அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப . தமிழ்ச்செல்வன் அவர்கள் நோர்வேக் குழுவிடம் தெரிவித்துள்ளார்.*

நேற்றைய சந்திப்புப் பற்றிக் கூறுகையில்;

நோர்வே அனுசரணையாளர்கள் என்ற வகையில் தற்பொழுது இங்கே ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளில் அவர்கள் ஒரு சந்திப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த நிலையில் இங்குள்ள நிலைப்பாடுகள் பற்றியும், அவற்றின் தீவிரத்தன்மைகள் பற்றியும் எடுத்து விளக்கியிருக்கிறோம். யுத்தநிறுத்த உடன்பாடு பாரிய நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டிருப்பது பற்றியும், எங்கள் மக்கள் சமாதான முயற்சிகளில் முழு அளவில் நம்பிக்கை இழந்திருப்பது பற்றியும், இதன் வெளிப்பாடு அண்மைக்காலமாக எங்கள் மக்களுக்கூடாகவே வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலைமைகள் பற்றியும்

(!2 ஆம் பக்கம் பார்க்க)



## அரசாங்கத்திடமிருந்து புதிதாக செய்தி எதனையும் எடுத்துவரவில்லை

***-நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் ஹெல்கேசன்***

நேற்றைய சந்திப்பின்போது அரசாங்கத்திடமிருந்து தாம் புதிதாக எவ்வித செய்தியையும் எடுத்துவரவில்லையென்றும், வழமையாக மேற்கொள்ளப்படும் சந்திப்பாகவே இது அமைந்துள்ளது என்றும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார்ஹெல்கேசன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில் யாழ்.குடாநாட்டில் நிலவும் அமைதியற்ற சூழல் குறித்து தாம் ஆராய்ந்ததாகவும் யாழ்.நிலைமைகள் குறித்தும் தாம் கவலையடைந்துள்ளதாகவும் தெரிவித்த அவர் இது குறித்து நேற்று முன்தினம் சனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பில் ஆராய்ந்ததாகத் தெரிவித்தார்.

## பட்டிருப்பு கோட்ட அரசியல்துறை அலுவலகம் மீது தேசவிரோதிகள் கைக்குண்டுத்தாக்குதல்!

### *-தாக்குதல் நடத்தியோர் படைமுகாமிற்குள் ஓட்டம்*

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் அமைந்திருக்கும் பட்டிருப்புக் கோட்ட அரசியல்துறை அலுவலகம் மீது நேற்றுக்காலை சிறிலங்கா படைகளுடன் சேர்ந்தியங்கும் தேசவிரோதிகளினால் கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

காலை 6.00 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அலுவலகம் மீது ஐந்து கைக்குண்டுகள் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து தாக்குதலை நடாத்தியோர் அலுவலகத்திலிருந்து 100 மீற்றர் தொலைவிலிருக்கும் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரின் முகாமிற்குள் சென்றதை மக்கள் கண்டுள்ளனர். தாக்குதல் நடைபெற்றபோது அந்த அலுவலகளுமின்றி தப்பித்துக் கொண்டனர்.இதேவேளை இத்தாக்குதல் நடைபெற்று சிறிது நேரத்தில் பெரியகல்லாறில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகமும் தாக்கப்பட்டுள்ளது.இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விடுதலைப் புலிகளால் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## மக்கள் செறிவாகவுள்ள பகுதிகளில் படையினர் ஆயுதபாணிகளாக நடமாடுவது தவிர்க்கப்பட வேண்டும்

### *யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் வலியுறுத்து*

யாழ்.குடாநாட்டில் மக்கள் நடமாட்டம் செறிவாகவுள்ள பகுதிகளில் படையினர் ஆயுதங்களுடன் நடமாடுவது கட்டுப்படுத்தப்பட வேண்டும் என யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வலியுறுத்தியுள்ளார்.

யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலையில் அங்கு இயல்பு நிலையைத் தோற்றுவிப்பது தொடர்பில் யாழ். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமாலை 4.30 மணியளவில் ஆரம்பமான இச்சந்திப்பு சுமார் மூன்று மணித்தியாலங்கள் நடைபெற்றது. இதில் யாழ்.யுத்தநிறுத்தக் கண்காணிப் புக்குழு அதிகாரி ரொனிமைவேட், யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, தமிழ்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, ரவிராஜ், யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஸ்,சிறிலங்கா இராணுவ யாழ்.மாவட்டத்தளபதி சுனில் தென்னக்கோன் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன் போதே இளம்பரிதி யாழ்.மாவட்டத்தில் மக்கள் அதிக நடமாட்டமுள்ள பகுதிகளில் படையினர் ஆயுதங்களுடன் நடமாடுவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என வலியுத்தினார். (27)

## 18- ஆம் திகதிவரை விளக்கமறியல்!


(வடமராட்சி)

இணுவில் சந்திப்பகுதியிலுள்ள முடிதிருத்தகம் மீதான துப்பாக்கிச் சூடடுச்சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்களான படைச்சிப்பாய்கள் இருவரும் மல்லாகம் மாவட்ட நீதவான் முன்னிலையில் நேற்று இரவு ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

மல்லாகம் மாவட்ட நீதவான் திருமதி . சரோஜினி இளங்கோவன் அவர்களது வாசஸ்தலத்தில் . பலத்த பாதுகாப்பின் மத்தியில் சுன்னாகம் பொலிசாரால் ஆஜர் செய்யப்பட்ட இவர்கள் இருவரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவை அவர் பிறப்பித்துள்ளார். (27,33)

## ஊரடங்கு பிறப்பிப்பு

யாழ். மாவட்டத்தில் நேற்றிரவு பத்து மணி முதல் மீண்டும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இது இன்று அதிகாலை ஐந்து மணிவரை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ள போதும் மதியம் 12 மணிவரை நீடிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது (33)



## தொழில்நுட்பப் பயிற்சி நிலையகட்டடத் திறப்புவிழா

லண்டன் ரி.ஆர்.ரெக்கின் அனுசரணையுடன் கிளிநொச்சியில் தொழில்நுட்பப் பயிற்சி நிலைய கட்டடத்திறப்பு விழாவும், கண்காட்சி நிகழ்வும் பொருண்மிய மதியுரையகத்தால் நேற்றுக் காலை 10.00 மணியளவில் நடாத்தப்பட்டது. இதில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கலந்துகொண்டு கண்காட்சியினை ஆரம்பித்து வைத்தார்.

முதல் நிகழ்வாக ஈகச்சுடரினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஏற்றினார். அதனையடுத்து தமிழீழ தேசியக்கொடியினை அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றினார். அகவணக்கத்தைத் தொடர்ந்து ரி.ஆர் ரெக் பெயர்ப்பலகையினை அவுஸ்திரேலியா ரெக் இணைப்பாளர் சண்குமார் திறந்துவைத்தார். நினைவுக்கல்லினை லண்டன் ரி. ஆர். ரெக் முகாமையாளர் சிறிதரன் திரைநீக்கம் செய்தார். அடுத்து கட்டடத் திறப்புவிழா இடம்பெற்றது. வரவேற்பு மண்டபத்தினை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திறந்துவைத்தார். மின்னியல் கட்டடத்தை பிரதித்திட்டப்பணிப்பாளர் தயாகுணரட்ண சிங்கம் திறந்து வைத்தார். கணினி மென்பொருள் கட்டடத்தை அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி.தமிழினி திறந்து வைத்தார். வன்பொருள் கட்டடத்தை (!2ஆம்பக்கம் பார்க்க)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்:- 20 - 12 - 1985

விண்ணில்:- 24 - 06 - 2005

*அன்பான உன் பேச்சும்*
*அழகான புன் சிரிப்பும்*
*எந் நாளில் நாம் காண்போம்*
*இதயம் கனக்குதய்யா.*

இவரது இல்லத்தில் நாளை நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இவரது மரணச்சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

தகவல்:-
அம்மா, மேரிறீற்றா(பேபி),
சகோதரர்கள்.

*குரவில் உடையார்கட்டு.* (சி.12501)



**அமரர்**
**காராளசிங்கம் சஜிறேந்தன்**
**(உயர்தரம் 2005 வர்த்தகம்**
**உடையார்கட்டு மகாவித்தியாலயம்)**

# REQUEST FOR PROPOSAL

**Open Well rehabilitation &**
**Construction of Medical shelters**

**Closing Date: 15th August 2005**

The Sub-Delegation of the International Committee of the Red Cross (ICRC) in Kilinochchi is searching for construction companies, willing to contract for Open Well rehabilitation and the building of medical shelters in Mullaitivu and Vanadamarachchi East. The projects should start by 21st of August 2005.

**1) Project Quantities and Phases**

1. **Project #1:**

4 X Semi Permanent Medical Shelters Dimensions:30 X 20 Feet
Quality of walls: 7feet high concrete block work.
Pillars: 9 X Pillars, 7 feet high by 8 inch wide.
Windows: 02 X Window, 3X 3 feet.
Doors:1 X wood Door; single-side opening/ 3 X 6 feet
Quality of Floor: concrete floor / 30 X 20 Feet/plastered
Quality of roofing: Cadjan roofing

**2. Project #2**

21 X Open well- Apron + Drainage
23 X Open well Pillars (Pair)
Dimensions: 5 feet open well, 4 feet diameter Apron,
1 feet -6 inch Long X 6 Inch Width Drainage Channel,
8 feet height X 1 feet Width Pillar

**2. Structure & Detail of Proposal.**

- The proposal should feature subtotal-amounts for every subproject
- All materials should be listed and quantified both in volume and unit price
- Labour costs should be listed and quantified both in volume and unit price
- Project start & end dates should be indicated for every project
- All prices are to denominated in local currency (LKR)
- Terms of payment has to be indicated in the proposal

**Specific details of the project, including diagrammatic representation are available on request at the offices of the ICRC in Kilinochi and Puthukkudiyiruppu**

**The projects will be carried out under the strict supervision of the ICRC.**

Interested Companies and individuals are invited to submit their bids in a sealed envelope until **15th of August 2005** to the following address:

**International Committee of the Red Cross**
**Subdelegation Kilinochchi,**
**Logistics Department,**
**Iranamidu Junctionm,**
**Kilinochchi.**

(சி.12489)

## வரிவிளம்பரம்

### கடை விற்பனைக்கு

கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கும் கச்சேரிக்கும் இடையில் கிணறு, மலசலகூட வசதியுடன் கடை விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- வன்னியன் பல்பொருள் வாணிபம், கச்சேரி முன்பாக-(பிரபா), கிளிநொச்சி,P.T 021 2285776 (6519)

### விற்பனைக்குண்டு

தவிடுதின்னி 497யாழ்சாலை - கிளி மேற்படி ஸ்தாபனத்தில் வெதுப்பகமின்சாரம், கிறீம்மீற்றர் பிறசர், பாத் (ஐஸ்பழம்) கொம்பிறசர், மின்பிறப்பாக்கி toplan 15 kv, குளிர் சாதனப்பெட்டி, வாட்டப்பம் என்பன விற்பனைக்குண்டு. (6524)

# 5 பட்டதாரி ஆசிரியர்களுக்கு இன்று நேர்முகத்தேர்வு

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத் தேர்விற்காக முல்லைத்தீவில் இருந்தும், கிளிநொச்சியில் இருந்தும் ஐந்து பேர் அழைக்கப்பட்டுள்ளனர். ரீ. பார்த்தீபன், 44/3 வலதுகரை கற்சிலைமடு, கே. மஞ்சுளா வித்தியானந்தாக் கல்லூரி அருகாமை, முள்ளியவளை, எஸ். தீபாதேவி மே/பா அன்ரனிமில் தர்மபுரம், பி. லக்ஸாந்தி 228சில்வா வீதி, வட்டக்கச்சி ஆகிய ஐவருக்குமுரிய நேர்முகத்தேர்வு இன்று காலை பத்து மணிக்கு கிளிநொச்சி கல்வி வலயத்தில் நடைபெறும் சம்பந்தப்பட்டவர்கள் சகலஆவணங்களுடனும் சமுகம்தருமாறுவலயகல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (கு)

# "முதலுதவி" நூல் வெளியீடு

கிளிநொச்சி மாவட்ட மலேரியா தடைஇயக்கமும்,வன்னிமாவட்ட சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவும் இணைந்து வெளியிடும் "முதலுதவி" நூல் வெளியீட்டு விழா கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிராந்திய மலேரியாத் தடைப்பகுதியின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான மலேரியா கட்டுப்பாட்டு மேற்பார்வையாளரும், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவின் வன்னி மாவட்ட ஆணையாளருமாகிய வேலுப்பிள்ளை சிறீதரன் எழுதிய முதலுதவி என்ற இந்நூல் வெளியீடு எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் வைத்தியகலாநிதி கா. சுஜந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (கு.தீ)

# கேள்வி அறிவித்தல்-2005

## வலயக்கல்வி அலுவலகம் ,முல்லைத்தீவு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிப்பாளரினால் 2005ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 17ஆம் திகதி முற்பகல் 11.00மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 11.30மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| இல | பாடசாலையின் பெயரும் வேலை விபரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 01. | மு/குரவில் தமிழ் வித்தியாலயம் | | | |
| | 1. மலசலகூடம் புனரமைத்தல் | 250/= | 750/= | M 9 |
| | 2. மலசலகூடம் (ஆசிரியர்)மீளமைத்தல் | 250/= | 750/= | M 9 |
| | 3. குடிநீர் விநியோக கிணறு அமைத்தல் | 300/= | 1200/= | M 9 |
| 02. | மு/தேவிபுரம் அ.த.க பாடசாலை<br>1. ஆசிரியர்/அதிபர் இளைப்பாறும் கட்டடம் அமைத்தல் | 500/= | 2000/= | M 9 |
| 03. | மு/முள்ளியவளை தமிழ்வித்தியாலயம்<br>1.ஆசிரியர்/அதிபர் இளைப்பாறும் கட்டடம் அமைத்தல் | 500/= | 2000/= | M 9 |
| 04. | மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை வகுப்பறைக் கட்டடம் அபிவிருத்தி வேலை. | 400/= | 1500/= | M 9 |
| 05. | மு/வற்றாப்பளை மகாவித்தியாலயம் வகுப்பறைக் கட்டடம் மிகுதி வேலை | 500/= | 2000/= | M 9 |

01 அ) மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 9 ஆம், அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.
ஆ) பாடசாலை அபிவிருத்திச்சங்கம் தங்களால் இவ் வேலையைச் செய்துமுடிக்கமுடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப்பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச்சங்கத்திற்கு முதலாம் பந்தி 'அ' இல் குறிப்பிட்ட நிபந்தனையும் மீளளிக்கக் கூடிய, மீளளிக்க முடியாத வைப்புப் பணமும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

02. கேள்விப்பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT) 15 வீதம் சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை பெறுமதி சேர்வரி (VAT) 15 வீதம் சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

03. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை முல்லைத்தீவு கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்து அல்லது இக் காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 08.08.2005 ஆம் திகதியிலிருந்து 16.08.2005 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும், இணைப்பிரதியும் கையொப்பம், இறப்பர்முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினை தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையில் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விபரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரின் முத்திரை இடப்பட்டு முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி புதன்கிழமை மு.ப.11.00மணிக்கு முன்னர் இடப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

05. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 03 மாதகாலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்கவேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய,தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06. கேள்வி ஆணவங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன், மேலதிக விபரங்களைப் பாடசாலை வேலைகள் கிளையிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

**பாடசாலை வேலைகள் கிளை,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**முல்லைத்தீவு.**

**ப.அரியரத்தினம்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**முல்லைத்தீவு.**

(சி.12490)

# இங்கிலாந்தில் பெண்கள் பர்தா அணிய வேண்டாம்

## இமாம் சபை கோரிக்கை

(லண்டன்)

இங்கிலாந்தில் வசிக்கும் முஸ்லிம்பெண்கள் மீதான இனவெறித் தாக்குதலைத் தவிர்ப்பதற்காக முஸ்லிம் பெண்கள் பர்தா அணிய வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து மசூதி இமாம் சபைத்தலைவரான டாக்டர் ஜகி படாவி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

லண்டனில் குண்டுவெடிப்பு சம்பவம் நடந்த யூலை ஏழாம் திகதிக்குப் பின் முஸ்லிம்கள் மீதான தாக்குதல் 269 இடங்களில் நடந்திருக்கின்றன.

முஸ்லிம் பெண்கள் பர்தா அணிந்து செல்வதால் அவர்களை உடனடியாக அடையாளம் கண்டு கொண்டு தாக்குகிறார்கள். ஆடை என்பது பெண்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டுமே தவிர ஆபத்தை ஏற்படுத்துவதாக இருக்கக் கூடாது. எனவே லண்டனில் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிய வேண்டாம் என இமாம் சபைத்தலைவர் ஜகி படாவி கூறினார்.



பிரித்தானியப் பிரதமர் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தும் வெளிநாட்டவர்களைத் தவிர்க்கும் அரசின் அதிகாரங்களை வெளியிடவுள்ளார் என எதிர்பார்க்கும் வேளையில் மத்திய லண்டனில் இரு பெண் பொலிசார் காவற்கடமையில் ஈடுபடுகின்றனர்.

# பிரிட்டிஷ் பிரதமரின் கொள்கையால் லண்டன் அழியும்

# எச்சரிக்கிறார் அல்-ஹைதாவின் முக்கிய தலைவர்

(டுபாய்)

**பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயரின் கொள்கைகள் லண்டனில் மேலும் அழிவை ஏற்படுத்தும் என அல்-ஹைதா தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவர் அய்மன் அல்-ஜாவாக்ரி கூறியுள்ளார்.**

லண்டனில் கடந்த மாதம் ஏழாம், 21 ஆம் திகதிகளில் பல இடங்களில் குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடந்தன. இந்தக் குண்டுவெடிப்பு சம்பவங்களில் 57இற்குமேற்பட்டோர் பலியாயினர். 700 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். பொது மக்களின் நம்பிக்கையைக் குலைக்கும் வண் ணம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் சம்பவங்கள் மக்களிடையே பீதியை ஏற்படுத்தின. குண்டுவெடிப்பில் தொடர்புடையவர்களை தேடும் வேட்டை முடுக்கிவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் துபாயில் இருந்து ஒளிபரப்பாகும் அல்ஜசீரா தொலைக்காட்சியில் நேற்று முன்தினம் அல்-ஹைதா தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவர் அய்மன் அல்-ஜாவாக்ரியின் உரை ஒளிபரப்பானது.

அதில் அல் ஜாவாக்ரி "லண்டனில் இரு முறை நடந்த குண்டுவெடிப்பு சம்பவங்களுக்குப் பின்னரும் பிரதமர் ரொனி பிளேயர் எடுத்துவரும் கொள்கை ரீதியான முடிவுகள் லண்டனை மேலும் அழிவுக்குக் கொண்டு செல்லும்"என எச்சரித்துள்ளார்.

## வேறு நாடுகளில் நடக்கும் தீவிரவாதத்திற்கு பாகிஸ்தான் பொறுப்பேற்க முடியாது- முஷாரப்

(இஸ்லாமபாத்)

வேறு நாடுகளில் நடக்கும் தீவிரவாதத்துக்குப் பாகிஸ்தான் பொறுப்பேற்க முடியாது என்று முஷாரப் கூறியுள்ளார்.உலகின் எந்த நாட்டில் தீவிரவாத தாக்குதல்கள் நடந்தாலும், பாகிஸ்தான் மீதே பழி சுமத்துகிறார்கள். இது ஏன் என்று தெரியவில்லை.

தீவிரவாதத்துக்கு எதிராக அனைத்து நாடுகளும் இணைந்து செயற்பட வேண்டும். அப்படியானால் தான் தீவிரவாதத்தை ஒழிக்க முடியும். அதைவிட்டு விட்டு ஒரு நாட்டுக்கு இன்னொரு நாடு குற்றம் சாட்டிக்கொண்டே இருந்தால் தீர்வு ஏற்பட்டுவிடாது. வேறு எந்த நாட்டில் நடக்கும் தீவிரவாத செயல்களுக்கும் பாகிஸ்தான் பொறுப்பேற்கமுடியாது. பாகிஸ்தான் மீது பழி சுமத்தும்போது கோபம் கோபமாகத் தான் வருகிறது.

பாகிஸ்தானில் இப்போது அல்-ஹைதா தீவிரவாத இயக்கம் இல்லை. அது முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டது லண்டனில் நடந்த தீவிரவாதத் தாக்குதலுக்கு ஒருவேளை பின்லேடன் நேரடியாக உத்தரவு பிறப்பித்து இருக்கலாம் இவ்வாறு முஷாரப் கூறினார்.



கிறேபோட்டி மனைவி லூறாபுஷ்சுடன் நடந்து செல்லும் ஜோர்ஜ் டபிள்யு புஷ் பார்வையாளரை நோக்கிக் கையசைக்கின்றார்.

# ரொனிபிளேயரின் கடும் போக்கே லண்டன் நகர் மீதான தாக்குதல்

(லண்டன்)

அல்-ஹைதா தலைவர் பின்லேடனின் சமரசத்திட்டத்தை இங்கிலாந்து பிரதமர் ரொனிபிளேயர் ஏற்காததால் தான் லண்டன் தொடர்குண்டு வெடிப்புத்தாக்குதல் நடந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

அல்குராப்பா என்ற அமைப்பின் செய்தித் தொடர்பாளரும், தீவிரவாதியுமான அபுஇஸ்சாதீன் பி.பி.சி. தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது; ஈராக் ஆப்கானிஸ்தான் உட்பட பல நாடுகளிலும் நிறுத் தப்பட்டுள்ள இராணுவத்தை விலக்கிக்கொண்டால் போர்நிறுத்தம் செய்யத்தயாராக இருக்கிறோம் என்று ஒரு சமரசத் திட்டத்தை பின்லேடன் முன்வைத்தார். இதற்கு ரொனிபிளேயர் சம்மதிக்கவில்லை. இந்த சமரசத் திட் டத்தை அவர் ஏற்க முன்வரவில்லை. இதைத் தொடர்ந்து தான் தாக்குதல் நடந்தது.

இங்கிலாந்து மக்கள், ரொனிபிளேயர் அரசுக்கு எதிராகத் திரண்டு, இராணுவத்தை வாபஸ் பெறச் செய்தால் அல்ஹைதா இயக்கத்தினர் இங்கிலாந்து மக்கள் மீது தாக்குதல் நடத்தமாட்டார்கள் என்பதற்கு நான் உறுதி அளிக்கிறேன் என்று பின்லேடன் கூறினார்.

லண்டன் குண்டு வெடிப்புச்சம்பவத்தை நான் கண்டிக்க மாட்டேன் அது சுதந்திரம் அடைவதற்கான தீரச் செயல். இவ்வாறு அபுஇஸ்சாதீன் கூறியுள்ளார்.

# வெளிநாட்டுத் திறமையாளர்களுக்கு தற்காலிக வேலை

## அமெரிக்காவில் புதிய சட்டம் அமுலாகிறது

(வோஷிங்டன்)

வெளிநாட்டிலுள்ள திறமையாளர்களுக்குத் தற்காலிக வேலை வழங்குவதற்காக "கெஸ்ட் வேக்கர்ஸ்" (அழைக்கப்பட்ட வேலையாட்கள்) என்ற பெயரில் விசா வழங்கும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்த அமெரிக்காவில் புதிய சட்டம் கொண்டு வரப்பட வுள்ளதாம்.

இதில் அமெரிக்காவில் கிடைக்காத வெளிநாட்டு திறமையாளர்கள் அமெரிக்காவில் தற்காலிகமாக வேலை செய்வதற்கு கெஸ்ட் வேர்க்கர்ஸ் விசா மூலம் அனுமதி அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கெஸ்ட் வேர்க்கர் திட்டத்தில் கலந்து கொளவதற்குச் சம்மதித்து கையெழுத்திடும் நாடுகளின் குடிமக்களுக்கு மட்டுமே இந்த விசா வழங்கப்படும்.

இந்த விசாவின்படி அமெரிக்கா செல்பவர்கள் இரண்டு ஆண்டுகள் மட்டுமே அங்கு தங்கியிருக்க முடியும். இரண்டு ஆண்டுகளுக்குப் பின் அவர் மீண்டும் தாய் நாட்டுக்குத் திரும்பி, அங்கு ஒருஆண்டு காலம் தொடர்ந்து தங்கியிருக்க வேண்டும். அதன் பின் மீண்டும் அவர் அமெரிக்கா சென்று இரண்டு ஆண்டுகளுக்கு வேலை செய்ய முடியும்.

மொத்தம் ஆறு ஆண்டுகள் அமெரிக்காவில் வேலை செய்ய முடியும். சட்டவிரோதமாக குடியேறுபவர்களைத் தடுக்க இந்த விசா தவிர அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழைபவர்களையும், விசா காலம் முடிந்த பிறகும் அமெரிக்காவிலேயே தொடர்ந்து தங்கி இருப்பவர்களையும் கண்டுபிடிக்க வகைசெய்யும் விதிமுறைகளும் இந்தப் புதிய சட்டத்தில் இடம் பெற்றுள்ளன.



கடந்த 21 ஆம் திகதி லண்டன் தாக்குதல் சந்தேக நபர் தலையை மூடியவண்ணமும், பொலிசாரிற்கு தகவல் வழங்கத்தவறிய பெண்மணியும் நீதிமன்றத்திற்குத் தமது வாக்கு மூலத்தை வழங்கச் செல்கின்றனர்.



ஈராக்கில் பர்வானாப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதியோரக் குண்டுத்தாக்குதலில் 14 அமெரிக்கக் கடற்படையினரும், ஒரு மொழிபெயர்ப்பாளரும் கொல்லப்பட்டபின் அத்தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் அமெரிக்காவின் 25 ஆவது படையணி அதிகாரிகளான பிரங்றை (இ) மற்றும் பெஞ்சமின் அடம்ஸ் (வலது).

# கனடாவில் புதிய கவர்னராக ஹெய்ட்டி பெண் நியமனம்

(ரொராண்ரோ)

ஹெய்ட்டியில் பிறந்த பெண் பத்திரிகையாளர் ஒருவர் கனடா நாட்டின் புதிய கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் பெயர் மைக்கெல்லா ஜீன். பிரஞ்சு மொழி பேசும் கியூபெக் மாநிலத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது அலங்காரப்பதவிதான் என்ற போதிலும் இந்த உயர்ந்த பதவிக்கு வரும் கறுப்பினப் பெண் இவராவார்.இப்போது இந்தப் பதவியில் இருப்பவர் அட்ரினே கிளார்க் சன். இவரும் சி.பி.சி தொலைக்காட்சிப் பத்திரிகையாளராக இருந்தவராம்.

# போரை வலிந்து நாம் தொடங்கமாட்டோம்

# எம்மீது திணிக்கப்பட்டால் எதிர்கொள்வோம்

**-மட்டு.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி**



(மட்டக்களப்பு)

நாம் போரை வலிந்து தொடங்க மாட்டோம்.அதேநேரம் போர் எம்மீது திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ளத் தயாராகவுள்ளோம். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் குவேனி தெரிவித்துளளார்.

நேற்று முன்தினம் மகிழடித்தீவில் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆரம்பித்து வைக்கப் பட்ட தையல் பயிற்சிநெறி ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் வலிந்து சண்டையைத் தொடங்கமாட்டார்கள். அதேநேரம் வலிந்து எங்கள் மேல் போர் திணிக் கப்பட்டால் அதனை எதிர்கொள்ளவும் நாம் தயாராகவுள்ளோம். நாம் இந்த சமாதான காலத்தில் கூட 60இற்கும் மேற்பட்ட போராளிகளை இழந்துள் ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள குடும்பப்பெண்களில் கூடுதலான வர்கள் தொழில் வாய்ப்பற்ற நிலை யிலுள்ளனர். அதிலும் கூடுதலான பெண்கள் கூலி வேலை செய்தே தமது வாழ்நாளைக் கழிக்க வேண் டிய தேவையும் ஏற்படுகின்றது. இங்கு மட்டக்களப்பு மாவட்ட படுவான்கரைப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பொருளாதார வசதி குறைவு. இதன்காரணமாகக் கூடுதலான பெண்கள் கல்வி கற்கக் கூடிய நிலை தடைப்பட்டு குடும்பத்திலுள்ள மூத்த பெண்கள் கூலி வேலைகள் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட் டுள்ளனர்.

அத்தோடு பல பெண்கள் கல்வி யைக் கற்றுவிட்டு வேலை வாய்ப் பில்லாத நிலையிலுமுள்ளனர். இவ் வாறான நிலையிலுள்ள பெண்கள் தையல் பயிற்சி மூலம் பயன் பெற்று தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.



நேற்று முன்தினம் கிளிநொச்சி டிப்போவீதியில் சேவியர்கடைச் சந்திக்கு அருகாமையிலுள்ள சந்தைக்கு முன்பாக ஈருருளி- உந்துருளி விபத்தில் ஈருருளி சேதத்திற்குள்ளாகி வீதியில் கிடப்பதனைப்படத்தில் காணலாம். (படம்-சோதி)

# உணர்வுகளின்பயணம் நூல் அறிமுகவிழா

(அலுவலக செய்தியாளர்)

யாழ். தேசிய கல்வியியற் கல் லூரியின் ஐந்தாம் அணி முகிழ் நிலை ஆசிரியர் திருநகரூர் செல்வி தர்சினி ஆனந்தராஜாவின் "உணர்வு களின் பயணம்." நூல் அறிமுகவிழா நாளை கிளிநொச்சியில் நடை பெற வுள்ளது.

வன்னி மாவட்ட முகிழ் நிலை ஆசிரியர் சமூகத்தினரின் ஏற்பாட்டில் நடைபெறும் மேற்படி "உணர்வுக ளின் பயணம்" என்ற நூலின் அறி முக விழாவானது கிளிநொச்சி அழ கியற் கலாமன்ற சுப்பையா நினைவு மண்டபத்தில் நாளை காலை 10.00 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியைச் சேர்ந்த சி.கலைக்கதிர் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நூல் அறிமுகவிழாவிற்கு பிரதம விருந்தினராக எழுத்தாளரும் கலைஞருமாகிய நா.யோகேந்திர நாதனும், சிறப்பு விருந்தினராக யாழ. தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா. தனபாலனும் கலந்து கொள்ள வுள்ளனர்.

அத்துடன் இந்நிகழ்விற்கு மட்டக் களப்பு, வவுனியா,யாழ்ப்பாணம் ஆகிய தேசிய கல்வியியற் கல்லூரி களில் கல்விபயிலும் முகிழ்நிலை ஆசிரியர்களும் கலந்து கொள்ள வுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (கு,தீ)

# திருமலையில் படையினர் சோதனைக் கெடுபிடி

# போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தீவிரபரிசீலனை

(திருமலை)

யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு முரணாக திருகோணமலை நகரில் புதிது புதிதாக அரச படையினரின் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. மற்றும் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவை சுமத்தியுள்ள குற்றச் சாட்டுக்கள் போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவினால் தீவிர பரிசீ லனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள் ளது.

இவ்வாறு போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் திருகோணமலை தலைமைப்பிரதிநிதி ஆர்தர் ட்வீற்றன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

" திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்கினேஸ்வரனுடன் இக்குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக முதலில் பேசுவதற்கு இருக்கின்றேன். எங் கெங்கு புதிய காவலரண்கள் அமைக் கப்பட்டுள்ளன. மற்றும் தொடர்பான விடயங்கள் குறித்து அவரிடமிருந்து முதலில் திட்டவட்டமான முறையில் தகவல்களைப் பெறவேண்டியுள்ளது. அந்தத் தகவல்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் பாதுகாப்புப்படை களின் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்து அவர்களுடன் பேசு வதற்கு எண்ணியுள்ளேன்" என்று கண்காணிப்புக்குழுவின் திருமலை தலைமைப் பிரதிநிதி ஆர்தர் ட்வீற் றன் தெரிவித்தார். புத்தர்சிலை தொடர்பான வழக்கு விலக்கிக் கொள்ளப்பட்ட பின்னர் புத்தர்சிலை பிரச்சினை மீண்டும் பதற்ற நிலையை உருவாக்கியுள்ளது. தற்போதைய நிலவரம் மோசமடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# புலமைப்பரிசில் மாணவருக்கான செயலமர்வும் முன்னோடிப்பரீட்சையும்

(முல்லை)

நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை முன் னிட்டு செயலமர்வையும், முன் னோடிப் பரீட்சையையும் முல்லை. மாவட்ட மாணவர் அமைப்பும், சோ.ஆ நிறுவனமும், குமுழமுனை இளந் தளிர் கல்வி நிறுவனமும் இணைந்து, நடாத்தவுள்ளதென குமுழமுனை இளந்தளிர் கல்வி நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி குமுழமுனை மகாவித்தியாலயத்தில் காலை ஒன்பது மணிக்கு செயலமர் வும், அதேபாடசாலையில் பத்தாம் திகதி காலை ஒன்பது மணிக்கு முன் னோடிப்பரீட்சையும் நடைபெறவுள் ளது.

இதில் ஐந்து பாடசாலைகளான குமுழமுனை ம.வி, செம்மலை ம.வி, அளம்பில் றோ.க.வித்தியாலயம், ஆறு முகத்தான்குளம் பாடசாலை, உடுப் புக்குளம் அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகள் கலந்துகொள்ள வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)




கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மலசல கூடம் முன்பாக குப்பை கூழங்கள் அகற்றப்படாது இருப்பதனைப் படத்தில் காணலாம். (படம்-சோதி)

# வட்டக்கச்சி ம.வித்தியாலயத்தில் கல்விக்கண்காட்சி

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் பாடசாலை மட்டக் கல்விக்கண்காட்சி கடந்த புதன்கிழமை காலை பத்து மணியளவில் பாடசாலை முதல்வர் சி.சந்திரராஜா தலைமையில் ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் பாடசாலையில் கல்வி கற்கும் தரம் ஒன்று தொடக்கம் பன்னிரண்டு வரையான மாணவர்களின் கல்வி சம்பந்தமான பொருட்களும், ஆக்கங்களும் கண்காட்சிக்காக வைக்கப் பட்டிருந்தன. இக்கண்காட்சியானது கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இக்கண்காட்சியில் சிறந்த கண்காட்சிப்



... தெரிவு செய்யப்பட்டு கோட்ட மட்டப்போட்டிக்குத் தெரிவாகின்றன. ...கண்காட்சி நிகழ்வை பெருந்திரளான மக்கள் பார்வையிட்டுள்ளனர்.(12)

# திருமலையில் இராணுவக்குவிப்பும், தேடுதலும்

# அகிம்சை வழியில் போராட மக்களை நிர்ப்பந்திக்கும்

**-திருமலை தமிழ் மக்கள் பேரவை கண்காணிப்புக்குழுவிற்கு மகஜர்**

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் மேற் கொள்ளப்பட்டுள்ள இராணுவக்குவிப் பும், தேடுதல் நடவடிக்கைகளும் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும். இந்த நிலை தொடருமாயின் தமிழ் பேசும் மக்கள் அகிம்சை வழியில் வன்முறைக்கு இடம்கொடாது தொடர் ந்து போராடுவதற்கு நிர்ப்பந்திக்கப் படுவார்கள் என்று திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர், வ.விக்கினேஸ்வரன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருகோண மலைத்தலைவருக்கு அனுப்பிய மகஜரில் தெரிவித்துள்ளார்.

தற்போது திருகோணமலை நக ரம் முழுவதும் இராணுவ மயப்படுத் தப்பட்டுள்ளது. சோதனைச்சாவடிகள் விரும்பிய இடங்களில் நிறுவப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. வீதிக்கு வீதி இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. மக்களின் அன்றாட வாழ்க்கை முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சட்ட விரோத புத்தர்சிலையை அகற்றுமாறு கோரிய தமிழ்பேசும் மக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வெகுமதி திறந்த வெளிச்சிறையே. தமிழ் பேசும் மக்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள னர். இது மனித உரிமை மீறல் மட்டு மல்ல, சமாதான ஒப்பந்தத்திற்கு முற்றிலும் விரோதமான செயலாகும் என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

படையினர் தமது நடவடிக்கை களை முகாம்களுக்குள் இருந்து செய்யட்டும். ஆனால் தமிழ் மக்க ளைப்பயமுறுத்தும் நோக்கில் செயற்படுவதானது யுத்தநிறுத் தத்தை அடியோடு இல்லாது செய் கின்ற நடவடிக்கையாகும். இந்த நிலை தொடர்வதை அனுமதிக்க முடியாது. எனவே சமாதானத்திற்குப் பொறுப்பான போர்நிறுத்தக்கண் காணிப்புக்குழு இதில் தலையிட்டு இராணுவத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் சட்டவிரோத புத்தர் சிலையை அகற்றவேண்டும். சமா தானம் நீடித்துநிலைக்க இவ்வி ரண்டும் நிறைவேற்றப்படவேண்டும் என்று பேரவை தனது மகஜரில் தெரிவித்துள்ளது. மகஜரின் பிரதிகள் சனாதிபதி, எதிர்க்கட்சித்தலைவர், இராணுவ மற்றும் பொலிஸ் அதி காரிகளுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. (25)

# துவிச்சக்கரவண்டி வழங்கல்

(முல்லை)

முல்லைத்தீவு தொழில் நுட்பக் கல்லூரியில் கல்வி கற்கும் வீட்டு மின்இணைப்பு பயிற்சியாளர்கள் 25 பேருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பாவனைக்கென துவச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

வூட்ஸ் நிறுவனத்தினால் படிப்படி யாக வழங்கப்பட்டுவரும் இந்த துவிச்சக்கர வண்டிகள் வரும் வாரம் படகு வெளிஇணைப்பு இயந்திரம் திருத் தும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப் படவுள்ளதாக தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் க.வைரமுத்து தெரிவித்துள் ளார். (20)

# பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம் செல்லும் பொதுமக்களுக்குப் படையினர் பெரும் கெடுபிடி

(வலி – மேற்கு)

பொன்னாலை இராணுவ உயர்பாதுகாப்பு வலயப்பகுதியில் அமைந்திருக்கும் சிறிவரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு பல நிபந்தனைகளின் மத்தியிலேயே பொதுமக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும்கையடக்கத்தொலைபேசிகள்,புகைப்படக்கருவிகள் என்பன வற்றை எடுத்துச்செல்வதற்கு இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.

ஈழத்தின் தொன்மை வாய்ந்த வைஷ்ணவ ஆலயங்களில் ஒன்றான பொன்னாலை சிறிவரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருந்திருவிழா எதிர்வரும் 11ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16தினங்கள் இடம்பெறும்.

இம்மாதம் 27ஆம் திகதி இரதோற்சவத் திருவிழாவும், மறுநாள் 28 ஆம் திகதி தீர்த்தோற்சவத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. இந் நிலையில் படையினரின் இக்கெடுபிடி நடவடிக்கைகள் குறித்து பொதுமக்கள்விசனம் தெரிவித்துள்ளனர். (37)

# திருநெல்வேலி கந்தர் மடம்பகுதிகளில் அண்மையில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(நல்லூர்)

திருநெல்வேலி கந்தர்மடம் பகுதிகளில் திருடர்களின் தொல்லை மிகவும் அதிகரித்துக்காணப் படுகின்றது.

கடந்த வாரத்தில் திருநெல்வேலி சிவன்கோவில் மேற்கு வீதியில் அமைந்துள்ள வீடொன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த மூதாட்டியைத் தாக்கி காயப்படுத்திவிட்டு கமரா, மூன்றுபவுண் சங்கிலி ஆகியவற்றைத் திருடிச்சென்றுள்ளார்கள்.

இதேபோன்று இரவுவேளை வீடொன்றினுள்யன்னல் கம்பியை உடைத்துப் புகுந்த திருடர்கள் அங்கிருந்த பணப் பெட்டியை உடைத்தும் பணம் இன்மையால் திரும்பிச்சென்றுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள மற்றொரு வீடொன்றினுள் இருந்த நீர் இறைக்கும் இயந்திரத்தையும் திருடர்கள் திருடிச் சென்றுள்ளார்கள். திருநெல்வேலி ஆலயம் ஒன்றின் குருக்கள் வீட்டில் புகுந்தும் அங்கிருந்த பணத்தைத் திருடிச்சென்றுள்ளார்கள்.

இப்பகுதியில் உள்ள தனபாலசிங்கம் என்பவரின் வீட்டில் புகுந்து சுமார் ஐயாயிரம் ரூபா பணத்தைத் திருடிச் சென்றுள்ளார்கள். (41)

# காரியாலய பெயர்ப்பலகையில்; "தமிழ்"கொலை நடவழக்கை

சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள் கட்டமைப்பிற்கான அலகின் யாழ்மாவட்டக் காரியாலய பெயர்ப் பலகையில் தமிழ் எழுத்துக்களில் பிழைகள் காணப்படுகின்றன.

மேற்படி பெயர்ப்பலகை நகர அபிவிருத்தி நீர்விநியோக அமைச்சினால் கொழும்பில் தயாரிக்கப்பட்டு யாழ். மாவட்டச் செயலகத்தில் இயங்கி வரும் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளின் மீள் கட்டமைப்பிற்கான யாழ்.மாவட்டக்காரியாலயத்தில் போடப்பட்டுள்ளது."காரியாலயம்" என்பது "கார்யாலம்" என எழுதப்பட்டுள்ளது. தமிழ்ப்பகுதியில் இவ்வாறானதொரு பெயர்ப்பலகை போடப்பட்டுள்ளமை குறித்து பலரும் விசனம் தெரிவித்துள்ளனர். (சு)

# கௌரவிக்க ஏற்பாடு

(வலி-மேற்கு)

வட்டுக்கோட்டை-யாழ்ப்பாணக் கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகம் புகும் மாணவர்கள் விசேட பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவிருப்பதாக யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் நோயல் ஏ.விமலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த அடிப்படையில் இவ்வருடம் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான 16 மாணவர்களுக்கு விசேட பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த ஆண்டு முதல் விளையாட்டுப்போட்டிகளில் கலந்துகொண்டு பல்கலைக்கழக அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கும் விசேட விருதுகளும், ஊக்குவிப்புப்பரிசுகளும், வழங்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (37)

# புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு துரித வழிகாட்டல் செயலமர்வு

(முல்லைத்தீவு)

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான துரித வழிகாட்டல் செயலமர்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் இடம்பெறவுள்ளதாக முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை உரிய செயலமர்வில் தமக்கு வசதியான இடத்தில் பங்குபெறச் செய்யுமாறு முல்லை.வலய சகல பாடசாலை அதிபர்களையும் வலயக்கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார்.

# புது.பொன்னம்பலம் மருத்துவமனையில் பொது மருத்துவ சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

பொது மருத்துவ நிபுணர் ஜெகராஜாவினால் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவ மனையில் நாளை காலை எட்டு மணிமுதல் மாலை நான்கு மணிவரை நோயாளர்கள் பார்வையிடப்படவுள்ளனர். குறிப்பாக தொய்வு,சலரோகம், உயர் குருதி அழுத்தம் போன்றவற்றினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு ஆலோசனையும், சிகிச்சையும் வழங்கப்படவுள்ளது. பயன்பெறவிரும்புவோர் புதுக்குடியிருப்பு மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவ மனையின் வெளிநோயாளர் பகுதியில் தொடர்பு கொள்ளவும். (கு)

# வருடாந்தக் கண்காட்சி

(பூநகரி)

கிளி.த்ன்னாவில் அ.த.க.பாடசாலையின் பாடசாலை மட்ட வருடாந்த கண்காட்சி கடந்த திங்கட்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

கண்காட்சி மண்டபத்தை பிரதம விருந்தினரான உதவிக்கல்விப்பணிப்பாளர் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். சேவைக்கால ஆலோசகரும் அதிபர்களும், பாடசாலை அதிபர் சகிதம் கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

இறுதியில் உதவிக்கல்விப்பணிப்பாளரும், சேவைக்கால ஆசிரிய ஆலோசகரும், அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் ஆலோசனைகளை வழங்கினர். இக் கண்காட்சியில் ஆரம்பக்கல்விக்குரிய கணித,சுற்றாடல் சார்பான எளிமையான உபகரணங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இக்கண்காட்சி நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், எனப்பலர் கலந்துகொண்டனர். (34)

# வன்னியில் கால்நடை அபிவிருத்தி குறித்து த.பொ.மேம்பாட்டு நிறுவனம் தீவிர கவனம்

(விசுவமடு)

வன்னிப்பெருநிலப்பரப்பில் கால்நடைகளின் அபிவிருத்திக்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் புதிய நடைமுறைகளைக் கையாளவுள்ளது.

வன்னிப்பெருநிலப்பரப்பில் கால்நடைவளர்ப்பாளர்கள் எதிர்கொண்டு வரும் பல முக்கிய பிரச்சினைகள் காரணமாக கால்நடைகள் அழிந்து போகும் அபாயநிலை ஏற்பட்டு வருகின்றது.

கால்நடை வளர்ப்பாளர்கள் தாம் வைத்திருக்கும் கால்நடைகளின் விபரங்களை சரியான முறையில் வெளிப்படுத்தாத காரணத்தினால் கால்நடைகளுக்கு (ஆடு,மாடு) ஏற்பட்டுவரும் நோய்களுக்கு உரிய நேரத்தில் முன்னேற்பாடாக தடுப்பூசி மருந்துகளை ஏற்றுவதற்கு கால்நடை சுகாதார திணைக்களமும் மற்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன. தொற்றுநோய் ஏற்படும் காலங்களில் சரியான புள்ளிவிபரம் இல்லாத காரணத்தினால் ஒரு பகுதி கால்நடைகளுக்குத் தடுப்பூசி மருந்துகளை ஏற்றிவிட்டு, மிகுதியானவற்றிக்கு ஏற்றாது விடுவதனால் மருந்து ஏற்றிய, ஏற்றாத எல்லா கால்நடைகளுக்குமே நோய் ஏற்பட்டு கால்நடை கள் அழிவுறும் அபாய நிலை இருப் பதை அவதானிக்க முடிகின்றது. நோய்த்தடுப்பிற்கான மருந்தினை எடுத்துவருவதற்கும் கால்நடைகளின் புள்ளிவிபரம் அவசியமாகத் தேவைப் படுகின்றது. அத்தோடு நல்லின மாடு களையும், உழவுமாடுகளையும் இறைச்சிக்காகப் பயன்படுத்துவத னால் மாடுகள் அழிவுறும் அபாய நிலையும் ஏற்பட்டுவருகின்றது.

இவற்றிக்கெல்லாம் கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளின் சரியான புள்ளிவிபரங்களை வெளிப்படுத்தாமையே காரணமெனத் தெரியவந்துள்ளது. இந்நிலை தொடருமானால் கால்நடைகளை அபிவிருத்திசெய்ய முடியாத நிலை ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டு பத்திற்கும் மேற்பட்ட மாடுகளை வளர்ப்பவர்கள் தமது பிரதேசத்திலுள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனபிரதேச இணைப்பாளர்களிடம் தமது கால்நடைகளின் விபரங்களை சரியான முறையில் பதிவு செய்வதன் மூலம் செப்ரெம்பர் முதலாம் திகதியிலிருந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள, கால்நடைகளை இடத்திற்கு இடம் மாற்றுதல், இறைச்சித் தேவைகளுக்கென விற்பனை செய்தல் சொந்த இறைச்சித் தேவைக்கென பயன்படுத்துதல், திட்டமிட்டமுறையில் இன அபிவிருத்தியினை மேற்கொள்ளுதல், உரியகாலத்தில் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற கால்நடை சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் இலகுவாகப் பேணமுடியும். செப்.முதலாம் திகதியிலிருந்து கால்நடைகளை வடபகுதிக்கு வெளியே கொண்டுசெல்வதற்கான அனுமதி த.பொ.மே.நிறுவன நடுவப் பணியகத்தால் மட்டுமே வழங்கப்படும் என்பதையும் கால்நடைவளர்ப்போர் கவனத்திற் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (46)

# மாணவர்களிடமிருந்து பணம் அறவீடு; ஆசிரியர் தொழிற்சங்கம் கண்டனம்

வவுனியா தெற்கு கல்வி வலயப் பாடசாலைகளிடையே மாணவர்களிடம் இருந்து செயற்பாட்டறிக்கைக்கென பணம் அறவிடப்படுவதை ஆசிரியர் தொழிற்சங்கம் கண்டித்துள்ளதுடன் வலயத்திற்கும் இதனை நிறுத்த நடவடிக்கையெடுக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளது. கடந்த 2003ஆம் ஆண்டில் இருந்து, ஆண்டு பத்து மற்றும் பதினோராம் வகுப்புக்களில் கல்விகற்கும் மாண வர்களிடம் இருந்து 150 ரூபாவும், ஆண்டு ஐந்திற்குமேல் கல்வி கற்கும் மாணவர்களிடம் இருந்து நூறு ரூபாவும், 2005 இரண்டாம் தவணைவரை அறவிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வவுனியா தெற்கு கல்வி வலயத்துடன் ஆசிரியர் தொழிற்சங்கத்தினர் தொடர்பு கொண்டு இந் நடவடிக்கையை நிறுத்தும்படி கோரிக்கை விடுத்த போதிலும், இது சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையையும் கல்வி வலயத்தினர் மேற்கொள்ளமுன் வரவில்லையெனவும் ஆசிரியர் தொழிற்சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

இதுவரையில் சுமார் முப்பது இலட்சம் ரூபாய்களுக்கு மேல் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் நிதி திரட்டப்பட்டுள்ளதாகவும் ஆசிரியர் தொழிற்சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்..

# மாயவனூர்க்கிராம சிறார்களுக்கு விளையாட்டு உபகரணம் வழங்கல்

(வட்டக்கச்சி)

பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினரின் அனுசரணையுடன் பிற் நிறுவன நிதியில் மாயவனூர் கிராமத்தில் மாலை நேர கல்வி கற்றலில் ஈடுபடும் சிறார்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நான்கு மணியளவில் மாயவனூர் கிராம பொதுமண்டபத்தில் ஊரகவளர்ச்சிப்பணித்தலைவர் சி.திவாகரன் தலைமையில் நடைபெற்றது. சிறார்களுக்கு பந்துதுடுப்பாட்ட மட்டை, மற்றும் சிறார்களுக்கான சில சிறு விளையாட்டுப் பொருட்கள் போன்றனவும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பெண்கள் அபிவிருத்திபுனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர், மகளிர் அமைப்பினர், கிராமசேவகர், முன்பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (12)

# ஆங்கில ஆசிரியர் தூதுக்குழுவினர் கல்வியமைச்சு அதிகாரிகளுடன் சந்திப்பு

வடக்கு கிழக்கு மாகாண புதிய ஆங்கில ஆசிரியர்சங்க உயர்மட்ட தூதுக்குழு இசுறுபாயவில் கல்வியமைச்சு உயரதிகாரிகளை சந்தித்துப் பேச்சு நடத்தியது.

சங்கத்தலைவர் சி.ஞானாகரன் தலைமையில் மத்திய குழு உறுப்பினர்களான எம். எஸ் .எஸ். சிப்லி, எ.எஸ்.எம். சதீக், எம்.கரீம் ஆகியோர் இத்தூதுக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். கடந்த புதன்கிழமை காலை 11 மணிக்கு கல்வியமைச்சின் சிரேஷ்ட செயலாளர் விஜயரட்ண, கல்வி அமைச்சின் ஆங்கில உதவிக்கல்விப் பணிப்பாளர் நோயெல்ஜயமானே ஆகியோருடன் இப்பேச்சுக்கள் நடைபெற்றன.

இதுவரை நிரந்தரநியமனம் பெற்றுக்கொள்ளாத ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களிற்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுவதற்குத் தேவையான வழிவகைகள் குறித்து ஆராயப்பட்டன.


சங்கத்திற்கு ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்கள் தெரிவித்துள்ள முறைப்பாடுகள் இவர்களிடம் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

புதிதாக வெளியாகியுள்ள அரச சுற்றறிக்கை பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களிற்கும் , ஏனைய நிரந்தர ஆங்கில ஆசிரியர்களிற்கும், நிறுவன மயப்படுத்தப்பட்ட உயர்வள ஆளணியுடன் கூடிய ஆங்கில வதி விடக் கருத்தரங்குகளை விரைந்து நடத்துவது என்றும் இச் சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டது.

புதிய ஆங்கில ஆசிரியர்கள் அனைவரையும் விரைந்து பயிற்சிக்கல்லூரிகளிற்கு அனுப்புவது குறித்தும் பேசப்பட்டது. இச் சங்கத்திற்கு முறைப்பாடு தெரிவிக்கவிரும்பும் நிரந்தர மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் இதன் யாழ். தலைமைப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# போக்கு வரவு சாதனங்களில் புதிய தொழில்நுட்ப மாற்றங்கள்







உலகில் தொழில்நுட்பங்களில் மாற்றங்களும் விருத்திகளும் அதிகரித்து வரும் நிலையில் இங்கு காணப்படும் போக்குவரவு சாதனங்கள் சூழல் மாசடைதலை தடுப்பதற்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டவையாகும்.

அதன்படி முதலாவது படத்தில் காணப்படும் வாகனம் ஜப்பானில் நடைபெறும் "எக்ஸ் போ 2005" கண்காட்சியைக்காண வருகை தந்தோர் பிரயாணம் செய்த ஊர்தியாகும். இது சாரதியின்றி இயக்கப்படும் தானியங்கி வாகனமாகும். ஒரு தடவையில் 50 பேர் பயணம் செய்யக்கூடியது. மணிக்கு 30 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும். இது இயற்கை வாயுவின் சக்தியினால் இயக்கப்படுகிறது.

இரண்டாவது படத்தில் காணப்படும் புகைவண்டி சத்தமின்றி இயங்குவது மட்டுமன்றி இது சில்லுகளற்ற வண்டியாகும். மணிக்கு 100 கி.மீ செல்லும் இந்த ரயில் குறுகிய துரசேவைக்கு மட்டுமே பயன்படும். இதனால் சூழல் மாசடைதல் ஏற்படாது. இதற்கு "வீனிமோ" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

மூன்றாவது படத்தில் காணப்படும் பேருந்து மின்கல (பற்றரி) சக்தியில் இயங்கும். ஒன்றாகும் ஆகையினால் இதிலிருந்து எவ்வித புகையும் வெளிவராது. இதனை உலக நாடுகள் பலவும் வரவேற்றுள்ளன.

# குளோனிங் முறையில உருவாக்கப்பட்ட நாய்க்குட்டி

தென் கொரிய விஞ்ஞானிகள் உலகின் முதல் குளோனிங்முறை நாயை உருவாக்கியுள்ளனர் இரண்டரை மாதங்களுக்கு முன்பு குளோனிங் முறையில் இரண்டு குட்டி நாய்கள் உருவாக்கப்பட்டன இவற்றில் ஒன்று இறந்து விட்டது மற்றொன்று நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளது. அதன் பெயர் ஸ்னெபி என்பதாகும். ஏற்கனவே குளோனிங் முறையில் ஆடு, பூனை, எலி,குதிரை ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. குளோனிங் முறையில் இப்போது நாய்



உருவாக்கப்பட்டிருப்பது மனித குலத்துக்கு நன்மை விளைவிக்கும் செயல் என்று கருதப்படுகிறது. நாய்களுக்கும் மனிதர்களுக்கும் சில ஒற்றுமைகள் உள்ளன நாய்களின் குறிப்பிட்ட சில நோய்கள் மனிதர்க்ளையும் தாக்கும் தன்மை உள்ளவை. எனவே நாய்களின் அந்த நோய்களை என்ன மருத்துவ சிகிச்சை முறை மூலம் குணப்படுத்துகிறோமோ அதே முறையால் மனிதர்களின் நோய்களையும் குணப்படுத்த முடியும். ஆப்கான் வகையைச் சேர்ந்த மூன்று வயது ஆண் நாயின் காதில் இருந்து எடுக்கப்பட்ட செல் உறுப்பைக் கொண்டு குளோனிங் முறையில் இந்த நாய்கள் உருவாக்கப்பட்டன. இந்தச் செல் பெண் நாயின் கருமுட்டையுடன் சோதனைக் குழாயில் இணைக்கப்பட்டது. பிறகு அந்தக் கருமுட்டை ஒரு மஞ்சள் நிற லாப் ராடர் என்ற பெண் நாயின் கருப்பைக்கு மாற்றப்பட்டது. முழு கர்ப்ப காலமான இரண்டு மாதம் தாயின் வயிற்றில் வளர்ந்து பிறகு சிசேரியன் அறுவை சிகிச்சை மூலம் நாய்க்குட்டிகள் வெளியில் எடுக்கப்பட்டன.

# பூமியில்....

பூமியின் நிலப்பரப்பு 29 சதவிகிதம் தான். மிகுதி 71 சதவிகிதம் நீர்ப்பரப்பாகத்தான் உள்ளது. இவ்வாறு நீர் அதிகமாக இருக்க பூமியின் மேற்புறத்திலுள்ள பாறைகளின் இயல்புதான் காரணமாகும்.

பூமியின் மேற்பரப்பில் பல இடங்களில் மேற்பரப்பிலுள்ள பாறை வெளிர் நிறத்தில் எடை லேசானதாக கருங்கற் பாறையாக உள்ளது. கருங்கற் பாறை என்று இது அழைக்கப்பட்டாலும் இப்பாறைகள் உண்மையில் சாம்பல் நிறமாகத் தான் இருக்கின்றன.

பூமியின் மேலும் பல இடங்களில் பாறைகள் கறுப்பாகவும் எடை அதிகமாகவும் காணப்படுகின்றன. இவை எரிமலைப் பாறைகள் எனப்படுகின்றன. பூமி முழுவதும் கெட்டியானதாக இல்லை. இருநூறு கிலோ மீற்றர் ஆழத்தில் அது உருகிய குழம்பாக உள்ளது. மேற்புறத்தில் கடினமான பாறைகள் இக்குழம்பின் மீது மிதந்து கொண்டிருக்கின்றன.

கருங்கற் பாறைகள் எடைகுறைவாகவும் எரிமலைப் பாறைகளை விட மிக உயரத்திலும் உள்ளன. அதாவது கருங்கல் பகுதி நிலப்பரப்பாகவும் எரிமலை நீர்ப்பரப்பாகவும் காணப்படுகின்றன.

பூமி முழுவதும் ஒரேவிதமான பாறைகளால் ஆனதாக இருந்திருந்தால் பூமிமுழுவதும் நீர்ப்பரப்பாகவே இருந்திருக்கும் எரிமலைப் பாறைப்பகுதிகள் தாழ்ந்து மிதந்ததால் அந்த இடங்கள் பெரும் பளளங்கள் ஆக உள்ளன. அவைதான் கடல்களாக மாறியது என்று கூறப்படுகின்றது. இதற்கான காரணங்கள் மூன்றாக கூறப்படு கின்றன.

I) பூமி உருவான போது அதில் அடங்கியிருந்த தனிமரங்களில் ஒட்சிசனும்,ஐதரசனும் இடம் பெற்றிருந்தன. இவை இரண்டும் சேர்ந்து நீர் உண்டாயிற்று. இரண்டு ஐதரஜன் அணுவும் ஓர் ஒட்சிசன் அணுவும் சேர்ந்தால் நீர் மூலகம் உண்டாகும் இவ்வாறு உண்டான நீர் பள்ளத்தில் தொடர்ந்து தேங்கி கடல்கள் ஆயின என்று கூறப்படுகின்றன.

II) நீர் ஆவியாகி மேலே போகிறது என்பது நமக்குத் தெரியும். அது வளிமண்டலத்தையும் தாண்டிப் போய் விடாமல் பூமியின் ஈர்ப்பு சக்தி பிடித்து வைத்திருக்கிறது.

III) பூமியின் அழுத்தத்திற்கும் தட்பவெப்ப நிலைக்குமுள்ள உறவு, நீர் பெரும்பாலும் திரவ வடிவில் இருக்க உதவுகிறது.

ஒரு கட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து பள்ளங்களையெல்லாம் நீரால் நிரப்பியது. அந்த நீரி ஆவியாகி மேலே போய் குளிர்ந்த மேகமாக மாறி மழையாகப் பொழிகிறது. இவ்வாறு இடைவிடாது நடந்து கொண்டிப்பதால் நீர்ப்பரப்பு அப்படியே இருக்கிறது. மழை நீர்ப்பரப்பில் பெய்து ஓடிக்கடலை அடைந்தபோது அடித்துச் சென்ற உப்புக்கள் எல்லாம் சேர்ந்தமையினால்த்தான் கடல் நீர் உப்பாக உள்ளது.

# வெற்றி பெற என்ன வழி?

நாம் என்ன விடயத்தில் வெற்றி பெற விரும்புகிறோமோ அவ்விடயம் எந்நேரமும் எம்மனதில் ஆழப்பதிந்திருக்க வேண்டும். சரியான முறையில் திட்டமிட்டு அதற்கேற்ப முயற்சி செய்ய வேண்டும் தோல்விகளைக் கண்டு துவண்டுவிடக் கூடாது. மீண்டும் மீண்டும் முயற்சி செய்ய வேண்டும்.

நம்மால் செய்ய முடியாதது என்று எந்தக் காரியத்தையும் எண்ணி விடக்கூடாது. எந்தச்செயலாக இருந்தாலும் அதனை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்கு வழிகள் இருக்கின்றன.

ஒரு காரியம் செய்யும் போது அடுத்தவர் என்ன நினைப்பாரோ என்று அங்கலாய்க் காமல் நம்மால் முடிந்தவரை சரியாகச் செய்ய வேண்டும். வெற்றியை எட்டிப் பிடிக்கும் வரை சளைக்காது முயற்சி செய்யுங்கள். இப்போது வெற்றி உங்கள் கையில் .வாழ்க்கையில் நமக்குத் தோல்விகளே வரக்கூடாது என்று விரும்புவதை விட அவற்றைச் சமாளிப்பது எப்படி என்று எண்ணுவதே புத்திசாலித்தன மான செயலாகும்.

எடுத்த எடுப்பிலேயே பெறப்படும் வெற்றி அத்திவாரம் இல்லாத கட்டடம் போன்றது. அசைந்து கொடுக்காத வெற்றி என்ற பெரிய கட்டடம் உருவாக வேண்டுமா னால் அதற்கு தோல்வி என்ற அத்திவாரம் இன்றியமையாதது.

ஒரு வெற்றிக்கு முன்னால் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகத் தோல்விகள் ஏற்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அந்த வெற்றியும் நிலையானதாக இருக்கும்.

வெற்றி எப்போதும் எம்மைத் தேடிக் கொண்டு வருவதில்லை. நாம்தான் வெற்றி யைத் தேடிக்கொண்டு செல்ல வேண்டும். வெற்றியை யாராலும் விலை கொடுத்து வாங்க முடியாது. கடின உழைப்பினால் வருவதுதான் வெற்றி. வெற்றியால் சாதனை படைத்தவர்களின் சரித்திரத்தைப் பார்த்தால் அவர்களின் கடின உழைப்பு தெரியும். வெற்றிக்கு ஏழ்மை ஒரு தடை யேயல்ல. வெற்றி எல்லோரையும் கட்டித் தழுவிக் கொள் வதில்லை மனதில் உறுதி உள்ளவனையே அது தேர்ந்தெடுத்துக் கொள்கிறது.

# முதல் முறையாக விண்ணில் நடந்து சென்று டிஸ்கவரி பழுது பார்க்கப்பட்டது



விண்ணில் நடந்து சென்று விண்வெளி ஓடத்தை சரி செய்த முதல்வீரர் என்ற பெருமை அமெரிக்க வீரருக்கு கிடைத்துள்ளது.


அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையம் நாசா டிஸ்கவரி ஓடத்தை விண்ணில் செலுத்தியது அல்லவா? விண்ணில் நிலை நிறுத்தப்பட்ட சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துடன் அது போய் இணைந்தது. டிஸ்கவரி பூமியிலிருந்து கிளம்பியபோது அதிலிருந்து இரண்டு பாகங்கள் கழன்று விழுந்தன இதனால் டிஸ்கவரி மீண்டும் பூமிக்கு திரும்பும் போது வெடித்துச் சிதறுமோ என்ற சந்தேகம் எழுந்தது. எனவே டிஸ்கவரி விண்வெளி வீரர்ஸ்டீபன் ராபின்சன் விண்கலத்திலிருந்து வெளிவந்து விண் வெளியில் நடந்து சென்று டிஸ்கவரியின் அடிப்பாகத்தில் மூன்றுசென்ரி மீற்றர் நீளத்தில் வெளியில் தலைகாட்டிக் கொண்டிருந்த இரண்டு கேப்பில்லர்களைத் தனது கையினால் சரிசெய்தார். விண்வெளிவீரர் ஒருவர் விண்ணில் நடந்து ஓடத்தின் அடிப்பாகத்தில் பழுது பார்த்தது இதுவே முதல் முறையாகும். இந்தப்பணி வெற்றிகரமாக முடிந்தது.

# கர்ப்பிணிகள் புகைப்பிடித்தால்...

கர்ப்பகாலத்தில் புகைப்பிடித்தால், கருவிலுள்ள குழந்தைக்குப் பிறவிக் கோளாறுகள் ஏற்படும் என்றும், ஆகையால் கர்ப்பிணிப் பெண்கள் எக்காரணம் கொண்டும் புகைப்பிடிக்க வேண்டாம் என்றும் மருத்துவர்கள் தொடர்ந்து எச்சரித்து வருகின்றனர். இந்நிலையில் கர்ப்பத்தின்போது புகைப்பிடிப்பதால் குழந்தைக்கு உடல் ரீதியாக பிறவிக் கோளாறுகள் ஏற்படுவதுடன், அவர்களின் மூளையின் செயல்திறனும் கடுமையாகப்பாதிக்கப்படும் என்று இப்போது தெரியவந்துள்ளது.

கர்ப்பிணிப்பெண் புகைப்பிடிக்கும் பட்சத்தில் அவருடைய கருவில் உள்ள குழந்தையின் மூளை வளர்ச்சி பாதிக்கப்படும். இதனால் ஏடிஎச்டி எனப்படும் நடத்தை சீர்கேடு மற்றும் கவனக்குறைவு பிரச்சினைகளால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட குழந்தைகளால் சமுதாயத்துடன்இணைந்து வாழ முடியாது. மற்றைய குழந்தைகளுடன் ஒப்பிடும்போது படிப்பில் இவர்கள் மிகவும் பின்தங்கிவீடுவர். கவனக் குறைவு பிரச்சினை இருப்பதால் பாடங்களில் கவனம் செலுத்த முடியாமல் தவிப்பார்கள். நடத்தைகளிலும் பெரியமாற்றங்கள் தெரியும். சில நேரம் புத்திசுவாதீனம் இல்லாதவர்களாகவும் மாறலாம்.


# சூரியக் குடும்பத்தில் 10 ஆவது கோள் கண்டுபிடிப்பு



ஐக்கிய இராஜ்ஜியத்தைச் சேர்ந்த விண்வெளி ஆய்வாளர்கள் எமது சூரியனைச் சுற்றிவரும் பத்தாவது கோளினை கண்டுபிடித்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

எமது சூரியத்தொகுதியில் 1846 இல் நெப்தியூன் கண்டுபிடிக்கப்பட்டதி லிருந்து கண்டுபிடிக்கப்பட்ட பெரியபொருள் இதுவேயாகும். இது 2003 இல் முதல் தடவையாகக் கண்டுபிடிக்கப்பட்டாலும் தற்பொழுதே தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இது புளுட்டோவிலும் பெரியது. புளுட்டோவிலும் மூன்று மடங்கு தூரத்திலுள்ளதென விஞ்ஞானி கள் தெரிவிக்கின்றனர். இது சூரியனின் சுற்றுப்பாதையில் பிரதான கோள்களிற்கு கோணமாக அமைந்துள்ளது.

# மிகச் சிறிய காவலாளி றோபோ



*ஜப்பான்றோபோ தயாரிப்பாளரான திம்சுக்கோ லிமிற்ரட் நிறுவனம் முலாம்பழ அளவான கண்களை உடைய சில்லுகளைக் கொண்ட ,ஊதா, நீலம், செம்மஞ்சள் வர்ணங் களைஉடைய ஒருறோபோவைத் தயாரித்துள்ளது. இது ஒரு புதுவகையான சுற்றித்தி ரியத் தக்க அலங்கரிப்பாளர்.*

*அத்துடன் இது பாதுகாப்பு நாயாகவும் தொழிற்படு கிறது. இது பல திசைகளில் அசையக் கூடிய புகைப்படக் கருவி, தொலை பேசியைக் கொண்டது. வீட்டில் வீட்டுக்காரர் இல்லாத சந்தர்ப்பத்தில் இடம்பெறும் திருட்டு, கொள்ளைச் சம்பவங்களை அறிய முடியும். இதனுள் காணப்படும் மூன்று கீழ்ச்செந்நிற ஸ்கானர்களின் உதவியுடன் காட்சிகள் படமாக்கப்படுகிறது. இத்தொலைபேசி தானாகவே இயங்கக் கூடியது. இது முன்னோக்கிபின்னோக்கி நகரக்கூடியது. இது இவ்வருடம் நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஜப்பானில் விற்பனைக்கு வரவுள்ளது இதன் பெறுமதி 280.000 ஜெளன் களாகும்.*

# புலிகளின் தாக்குதலைச் சமாளிக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றதா?

## -ஜாதிக ஹெல உறுமய அரசிடம் கேள்வி

(கொழும்பு)

***இவ்வாண்டு இறுதியில் சனாதிபதித் தேர்தல் நடைபெறும்போது விடுதலைப்புலிகள் நடத்தத்திட்டமிட்டிருக்கும் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க அரசாங்கம் தயாராக உள்ளதா? என ஜாதிகஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க ரணவக்க அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பியுள்ளார்.***

கொழும்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும்போதே அவர் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

இந்தக் கருத்தரங்களில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

1994 ஆம் ஆண்டு மற்றும் 1999 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தல் நடைபெற்ற காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதைப் போன்று இம்முறை சனாதிபதித் தேர்தலின் போதும் விடுதலைப்புலிகள் தாக்குதல்களை நடத்தி நாட்டில் பதற்றத்தையும் குழப்பத்தையும் விளைவிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

1994 ஆம் ஆண்டு அவர்கள் பூநகரியில் தாக்குதல் நடத்திவிட்டு இங்கு காமினி திசாநாயக்கவை படுகொலை செய்தனர். அதேபோல 1999 இல் வன்னியில் தாக்குதல் நடத்திவிட்டு சனாதிபதித் சந்திரிகாவை கொலை செய்ய முயன்றனர். அதேபோல இம்முறை சனாதிபதித் தேர்தலிலும் தாக்குதல் நடத்த அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னர் சுமார் 30 ஆயிரம் பேர் இராணுவத்தை விட்டு விலகியுள்ளனர்.134 இராணுவப்புலனாய்வாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவற்றால் இராணுவத்தினரின் நிலை மனிதவலு ரீதியாகவும், உள ரீதியாகவும் மிகக் கீழ் மட்டத்திலேயே இருக்கின்றது எனத் தெரிவித்த சம்பிக்க ரணவக்க இந்நாட்டினுள் தங்களுக்குப் போதிய பாதுகாப்பில்லை என புலனாய்வுப்பிரிவு உயர் அதிகாரிகள் நாட்டைவிட்டு வெளியேற்றியுள்ளனர். அரசாங்கம் விடுதலைப்புலிகளைப் பலப்படுத்தி சிறிலங்கா இராணுவத்தை பலவீனப்படுத்துகிறது என்றும் குறிப்பிட்ட அவர்,விடுதலைப்புலிகள் அரசாங்கம் வழங்கும் பொருட்களை வைத்து விமான ஓடுபாதைகளை அமைத்து வருகையில், பலாலி விமான ஓடுபாதைத் திருத்த வேலைகளுக்காக நான்கு மாதங்களுக்கு மூடப்பட்டுள்ளது.விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தன்னிச்சையாக தனிநாட்டுப் பிரகடனத்தைச் செய்யப்போகிறார். இதற்கெதிராக சனாதிபதி என்ன நடவடிக்கைகளை எடுக்கவுள்ளார்? இந்த நிலையில் வடக்குகிழக்கில் விடுதலைப்புலிகள் குழப்பத்தை ஏற்படுத்த முயன்றால் அதனைக் கட்டுப்படுத்தி அமைதியை ஏற்படுத்த சனாதிபதி தயாராக உள்ளாரா? என்றும் ரணவக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

# குடிநீர் தட்டுப்பாடு

(கொழும்பு)

வறட்சியின் காரணமாக புத்தளம் மாவட்டம் முந்தல் பிரதேசத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தண்ணீர்த் தாங்கி அமைக்கப் பட்டுள்ளபோதும் அதில் தண்ணீர் நிரப்பப்படாதுள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# புதிய இடதுசாரி முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் லீனஸ் ஜயதிலக

அடுத்த சனாதிபதித் தேர்தலில் புதிய இடதுசாரி முன்னணி தனித்துப் போட்டியிடவுள்ளது. தங்கள் கட்சியின் வேட்பாளராக லீனஸ் ஜயதிலக நியமிக்கப்பட்டுள்ளதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷமற்றும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரினது கொள்கைகளும் ஒன்றே. இக் கொள்கைகளும் தொடர்பாக கதைத்துப் பயனில்லை என்பதால் இப்போது இருவரும் ஒருவருக்கொருவர் சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

இவ்விருவரினது கொள்கைகளும் அமெரிக்கத் தலைநகர் நியூயோர்க்கிலேயே தயாரிக்கப்படுகின்றன. அதனால் புதிய இடதுசாரி முன்னணி தனித்துப் போட்டியிடும் என விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.க.வில் புதிதாக 20 இலட்சம் உறுப்பினர்கள்!

சனாதிபதித்தேர்தலிலும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலிலும் வெற்றி பெறுவதற்காக புதிதாக 20 இலட்சம் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். இதுதொடர்பான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அக்கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.சனாதிபதித்தேர்தலை இந்த ஆண்டிற்குள் நடத்த சனாதிபதி நடவடிக்கை எடுக்காது விடின் ஐக்கிய தேசியக்கட்சி என்ன.நடவடிக்கைகளை எடுக்கும் எனக் கேட்டபோது, இந்த வருடத்திற்குள் சனாதிபதித்தேர்தல் நடத்தப்பட வேண்டியேற்படும் என தெரிவித்த அவர், தேர்தல் ஆணையாளர் சரியான முடிவை எடுப்பார் என்றும் குறிப்பிட்டார்.

# சிறி.வின் வேட்பாளரை பாக். ஆதரிக்காது

(கொழும்பு)

சிறிலங்கா சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால, ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்கு விண்ணப்பித்து, அதற்கான ஆதரவைக் கோருகையில், பாகிஸ்தான் அதற்கு ஆதரவளிக்காது எனத் தெரிவித்துள்ளது. நிரந்தர உறுப்புரிமை கோரி, மேலும் ஒரு சில நாடுகளுடன் இணைந்து, இந்தியா ஆதரவு நாடுகளைத் திரட்டி வரும் நிலையில், சிறிலங்காவும் இந்தியாவுக்கு ஆதரவு வழங்க இணங்கியுள்ளது. இதையடுத்தே பாகிஸ்தான் இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளதாகக் கருதப்படுகின்றது.

# இரண்டாவது பதவிப்பிரமாண வைபவத்தை வர்த்தமானியில் பதிப்பிக்க சனாதிபதி முயற்சி

## தடுத்துநிறுத்துமாறு ஐ.தே.க பொலிஸில்முறைப்பாடு

(கொழும்பு)

2000ஆம் ஆண்டு சனாதிபதி சந்திரிகா செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்படும் இரகசிய பதவிப் பிரமாணம் குறித்த வர்த்தமானி அறிவித்தலை இப்போது பதிப்பிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தலை பொரளையிலுள்ள அரசாங்க அச்சகத்தில் பதிப்பிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்துமாறு,பிரதேசபொலிஸ் நிலையத்தில் ஐக்கிய தேசியக் கட்சி முறைப்பாடு செய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்த இந்த முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட பொரளை பொலிசார், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதாக அவரிடம் உறுதியளித்துள்ளனர்.

1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற சனாதிபதித் தேர்தல்மூலம் இரண்டாவது துடவையாக சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட சனாதிபதி சந்திரிகா டிசம்பர் மாதம் 22ஆம் திகதி தனது இரண்டாவது சனாதிபதிப் பதவிக்காக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இந்தப் பதவிப் பிரமாணம் குறித்த விபரங்களை, 2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தேர்தல் ஆணையாளர் வர்த்தமானியில் வெளியிட்டிருந்தார்.

எனினும், 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தனது முதலாவது பதவிக்காலமான ஆறு ஆண்டுகள் நிறைவடையும்போது சனாதிபதி சந்திரிகா செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்படும் இரகசிய பதவிப்பிரமாணம் குறித்த விபரங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை.

இதனை இப்போது பதிப்பிப்பதன் மூலம் அந்த இரகசிய பதவிப் பிரமாணத்தை சட்டபூர்வமாக்குவதற்கு சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

1999ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் மீண்டும் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு அந்த ஆண்டே அவர் செய்துகொண்ட பதவிப் பிரமாணத்தின்படி, சனாதிபதி சந்திரிகாவின் இரண்டாவது பதவிக்காலம் இந்த ஆண்டுடன் நிறைவடைவதாகத் தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி,

எனவே, இந்த ஆண்டுக்குள் புதிய சனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடாத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்திவருகிறது.

எனினும், 2000ஆம் ஆண்டு சனாதிபதி சந்திரிகா செய்துகொண்ட இரகசிய பதவிப்பிரமாணத்தின்படி சனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டே நடைபெறவேண்டுமென்று சுதந்திரக் கட்சி தெரிவித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்.விக்டோரியா மாநில அமைச்சர் கொழும்பு விஜயம்

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் பண்டாஸோ போலஸ் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார். இரு தரப்பு சுற்றுலாத்துறை விவகாரங்கள் மற்றும் பொதுநலவாய நாடுகளில் விளையாட்டு ஆகியன தொடர்பில் இலங்கை சுற்றுலாத் துறை அதிகார சபையுடன் கலந்துரையாடும் பொருட்டே அவர் கொழும்பு வந்துள்ளார். அடுத்த வருடம் மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை விக்டோரியா மெல்போர்ன் நகரில் நடைபெறவுள்ள 18 ஆவது பொது நலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிக்கான ஒழுங்குகள் குறித்தும் இந்த விஜயத்தின் போது அவர் விரிவாக கலந்துரையாடுவார். இதேவேளை அவுஸ்திரேலிய சுற்றுலாத் துறை அமைச்சர் சுனாமியால் பாதிக்கப்பட்ட தென் பகுதிக்கும் விஜயம் செய்வார். அங்கு செல்லும் இவர் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டத்தின் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியில் உள்ளூர் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டம் குறித்தும் விக்டோரியா மாநில அரசாங்கத்தின் நிதியுதவி'யின் கீழ் மீள்கட்டுமான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் கலந்து பாடுவாரென அவுஸ்ரேலிய தூதரக வட்டாரங்கள் தெரி துள்ளன.

# அரசை விட்டுவிலக ஜே.வி.பி அவசரப்பட்டு விட்டது

## -அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா

கூட்டணியை ஏற்படுத்தியது சமாதான நடவடிக்கைகளை உடைத்தெறிவதற்கல்ல. யுத்தத்தினால் கெரில்லா அமைப்புக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் அதிகம். சமாதானத்தின் மூலமே கெரில்லா அமைப்புக்களைத் தாக்க முடியும் என புகையிரதப்போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. அரசாங்கத்தை விட்டு செல்ல அவசரப்பட்டுவிட்டது. ஜே.வி.பி தனது கட்சியைக் கட்டியெழுப்ப முயல்வதைப் போலவே, நாமும் எமது கட்சியைக் கட்டியெழுப்ப முயல்கிறோம். ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தால் ஜே.வி.பிக்கு ஏற்படும் நிலை என்ன என்பது பற்றி நினைத்துப் பார்க்கவேண்டும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாம் தனித்து விட்டால் தோற்கவும் கூடும். ஜே.வி.பி யுடன் இணைந்ததாலேயே எமக்கு ஆட்சியதிகாரம் கிடைத்தது. பிரதான கட்சியுடன் இடதுசாரிக்கட்சிகள் இணைந்தால் எம்மால் வெற்றிபெற முடியும் என்பதையே அது எடுத்துக்காட்டுகிறது. இந்தத் தேர்தல் முறைக்கமைய எந்தவொரு கட்சிக்கும் இனிமேல் பெரும்பான்மை அதிகாரம் கிடைக்காது. இந்த அரசியலமைப்பை மாற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு விருப்பமில்லை. எதிர்காலத்தில் சனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தியே அரசாங்கத்தைக் கொண்டு நடத்த முடியும்.

போக்குவரத்து அமைச்சில் பணிபுரிகையில் பல பிரச்சினைகள் எழுந்தன. அங்கு நான் 115 வேலை நிறுத்தப்போராட்டங்களுக்கு முகம் கொடுத்தேன். போக்குவரத்து அமைச்சுடன் சம்பந்தப்பட்ட 114 தொழிற்சங்கங்கள் உள்ளன என்றார்.

# இலங்கை சென்றபோதே அரச படைகளின் அட்டூழியங்களை நேரில் காணமுடிந்தது

## - கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்

ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட பாதிப்புக்களை நேரில் கண்டறிவதற்காக இலங்கை சென்றிருந்த போதே வட பகுதியில் போரினால் ஏற்பட்ட அழிவுகளையும் இன்னல்களையும் நேரில் காண முடிந்தது.

இவ்வாறு நேற்று முன்தினம் வியாழக்கிழமை ரொரன்ரோவில் நடைபெற்ற தமிழ் வேட்பாளர் அறிமுக விழாவில் பேசிய கன்சர்வேட்டிவ் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான பியரே பொலிவியர் தெரிவித்துள்ளார்.

கனடாவின் முதல் இஸ்லாமிய பாராளுமன்ற உறுப்பினர், முதல் ஜப்பானிய வழி பாராளுமன்ற உறுப்பினர், முதல் இந்து பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரை அறிமுகப்படுத்திய பெருமை கன்சர்வேட்டிவ் கட்சியை சாரும் எனவும் கன்சர்வேட்டிவ் கட்சி பாராளுமன்றக் குழுவே சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு முன்னுதாரணக் குழுவாக திகழ்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அவ்விழாவில் பேசிய பிறிதொரு பாராளுமன்ற உறுப்பினரான டீபக் ஓபராய் பேசுகையில், கனேடிய பிரதமருடன் சென்ற பாராளுமன்றக்குழுவில் தானும் இடம்பெற்று இலங்கை சென்றிருந்ததாகவும், அங்கிருந்த சமயத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்ததாகவும், அந்த சந்திப்பு குறித்து சிறிலங்கா அரசாங்கத்தரப்பிலிருந்து கண்டனங்கள் எழுந்ததாகவும் தெரிவித்ததோடு, மக்களால் சனநாயக வழிமுறையில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களையே சந்திப்பது கண்டனத்துக்குள்ளாவதை தன்னால் எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

# எம் வேண்டுகோளை நிராகரித்தால் விரும்பாத விளைவுகள் ஏற்பட்டே தீரும்

**-கூட்டமைப்பு பா.உ.ஈழவேந்தன்**

எம் வேண்டுகோளை சிங்கள அரசும், இராணுவமும் நிராகரிக்குமானால் எவரும் விரும்பாத விளைவுகள் நாட்டில் ஏற்பட்டே தீரும். நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் இணுவிலில் நடந்த நிகழ்ச்சி இதனையே எடுத்துக்காட்டுகின்றது என கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஈவிரக்கமற்ற முறையில் சிங்கள இராணுவம் நிகழ்த்திய துப்பாக்கிச் சூட்டினால், இணுவிலில் முடிதிருத்தும் நிலையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த பாலையூற்று திருகோணமலையைச்சொந்த இடமாகக் கொண்டவரும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஜெயசீலன் சாந்தரூபன் உயிர் பரிதாபகரமாக பறிக்கப்பட்டது. இத்துப்பாக்கிச் சூடு சாந்தரூபனின் கண்களைத் துளைத்து வெளியேறி, அவரின் உயிரை பறித்த நிகழ்ச்சியை. அனைத்து தமிழ் மக்களும் வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

திருகோணமலையில் தமிழ் போராளிகளையும் தமிழ் இளைஞர்களையும், சாகடித்து விழுங்கி ஏப்பமிட்ட நிலையில் சிங்கள வெறியாட்டம் தணிய மறுத்து, திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜெயசீலன் சாந்தரூபனையும் சாகடித்து வெற்றிக்களிப்பில் மூழ்கியுள்ளது. மாசுமறுவற்ற இவ் இளைஞரின் உயிர் பறிக்கப்பட்ட நிலையில் கோண்டாவில் கிழக்கைச் சார்ந்த கே. லோகநாதனின் உயிரும் பதம் பார்க்கப்பட்டுள்ளது. எல்லைமீறி ஆத்திரத்திற்கு ஆளாகிய மக்கள் யாழ்.காவல்நிலையத்தில் பொறுப்பதிகாரியாக விளங்கிய சாள்ஸ் விஜயவர்த்தனா மீது தாக்குதலை நடாத்த அவர் உயிரும் போய் விட்டது.

தமிழ் உயிர் பெரிது. சிங்கள உயிர் சிறிது என்று கூறுமளவிற்கு நாம் இன வெறியர்கள்அல்ல. யாழ்ப்பாண காவல் நிலைய பொறுப்பதிகாரி உயிரிழந்தது வருந்தத்தக்கது. தாக்கப்பட்டவர்கள் தம்மைப் பாதுகாக்கின்ற முறையில் திருப்பித் தாக்குவது இயல்பு. மிதிக்கப்பட்ட புழுவும் வேதனை தாங்காது புரளும். புரளும் புழுவைப் பார்த்து ஏன் புரளுகின்றாா் எனக் கேட்பவர் மடையர் என அவர் தெரிவித்துள்ளார்.


## 17 ஆம் ஆண்டு நினைவலைகள்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 | 06 |
| 07 | 08 |
| 1968 | 1988 |



**லெப்.விக்ரர்**
**(நா.விக்ரோறியன் நேசராஜா)**
திருநகர், கிளிநொச்சி

தூங்குகின்றவர்கள் எழுவதற்கு பொழுது
இருமுறை விடிவதில்லை
மாவீரர்கள் மீண்டும் மண்ணில்
பிறப்பதும் இல்லை
வீழ்வதும் இல்லை
இவர்கள் மண்ணின் மைந்தர்கள்
வீரம் விளை வீதிகளில் விடுதலை
மூச்சோடு நிமிர்ந்த உன்
பாதச்சுவடுகளில் ஆயிரம் ஆயிரம்
மறவர் படை உன் பணிதொடர
உன் உணர்வுகளோடு சங்கமித்தபடியே
எம் நெஞ்சக்குழிகளில் நிறைந்த உன்
நினைவுகளில் நாளும் பயணிக்கின்றோம்

குடும்பத்தினர்
சின்னம்மாமார், சித்தப்பாமார்.

(சி.12472)



## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| ஈழமண்ணில் வித்தாக | ஈழமண்ணின் விடிவுக்காய் |
|---|---|
| 20 | 06 |
| 16 | 08 |
| 1978 | 1996 |



**2 ஆம் லெப் .செல்வி**
**[செல்வரத்தினம் சுபாசினி]**
1/4 ஏக்கர், குமரபுரம், பரந்தன்.

*மகளே செல்வச் செல்வியே*
*நீர் பரந்தன் மண்ணில் துள்ளிக் குதித் திருந்தவளல்லவா?*
*தாய் மண்ணைக் காத்திட களமாடி*
*அண்ணன் படையணியில் அங்கம் வகித்து*
*தரையணியிலும், வேவுப்படையணியிலும்*
*பல களம் கண்டு அண்ணையின் சிந்தனையில்*
*ஆழம் கொண்டு உன் திறனின் நிலை கண்டு*
*வேவுப்படையணி என்று கட்டளையிட்டார் அண்ணன்*
*மகளே ஒன்பது ஆணடுகள் ஆனாலும்*
*உன் சாதனை ஆள் உயர் மரமதில்*
*தமிழீழம் தமிழீழம் என்று பாடிய படியே*
*காவியமான அந்த நாள் இன்று*
*உன் உறவுகளை மறந்து ஒன்பது ஆண்டுகள்*
*ஆமிற்று உனக்காக காத்திருக்கும் அந்த உறவுகளை உமக்குத்*
*தெரிகிறதா உமது ஆத்மா*
*இறைவனடி சேர வேண்டுகிறோம்.*

தகவல்:
தந்தை,தாய், சகோதரர்கள், அத்தான்மார், மாமன்மார், அன்ரிமார்.

(6513)


## சுனாமியால் பாதிக்கப்பட்டோரின் வீடுகள் தீப்பிடித்து எரிந்தன

சுனாமி கடல் சீற்றம் காரணமாக பாதிப்படைந்த திஸ்சமாற மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் ஐந்து தீயினால் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளதாக திஸ்சமாறகம பொலிசார் தெரிவித்துள்ளனர்.

திஸ்சமாறகம சுனாமி முகாமில் அமைந்திருந்த இந்த வீடுகள் மின் ஒழுக்கு காரணமாகவே தீப்பிடித்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.(32)

## ரஜரட்டையில் குளங்களை புனரமைக்க 77 கோடி ரூபா நிதிக்கு அனுமதி

ரஜரட்டை பகுதியில் 1500 குளங்களை புனரமைக்கும் நடவடிக்கைகளுக்கு 77 கோடி 60 இலட்சம் ரூபாவை செலவிடுவதற்கான அனுமதியை திறைசேரி வழங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தை துரிதப்படுத்தும் பணியில் அமைச்சர் ரட்ணசிரி விக்கிரமநாயக்க ஈடுபட்டுள்ளார்.எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் இந்தத் திட்டங்களை பூர்த்தி செய்ய முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## முதல் முறையாக பொதுநிகழ்வில் சனாதிபதியின் மகன் விமுக்தி

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மகன் விமுக்தி குமாரதுங்க கடந்த புதன்கிழமை கொழும்பில் முதன் முறையாக பொது நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார்.

விசர் நாய் கடியினை மனிதா பிமான வழிகளில் கட்டுப்படுத்துவது தொடர்பாக விலங்குகள் நலன்புரி அமைப்புக்கள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்றிலே அவர் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார்.

மிருக வைத்தியத்துறையில் கல்வி கற்கும் தனக்கு இலங்கை யில் மிருகவைத்தியர்கள் குறித்து அலட்சியம் காட்டப்படுவது கவலையளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.


## Vacancy Announcement

**Save the Children**
in Sri Lanka

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organisation working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.
A vacancy exists for the following position.

**ADMINISTRATOR - FINANCE**
The Administrator – Finance is responsible and accountable for the smooth running of the finance units in the respective Regional/Programme Office, and also for effectively and efficiently ensuring that the finance functions of the Regional/Programme Office are in line with the laid down systems and practices.

**Only Sri Lankan citizens are eligible to apply for the above position.**
**Base Station :** Kilinochchi
**Qualifications and Experience:**
**Essential:**

1. Sound accounting background with proven experience and knowledge in a computerized accounting system.
2. Computer literacy in data base, spreadsheets and other accounting software.
3. Ability to work independently within the own functional area and work as part of a team.
4. Good interpersonal and communication skills.
5. Fluency in written and spoken English, Sinhala and/or Tamil.
6. Effective time management and leadership skills.
7. Demonstrate ability to monitor budgets.

**Desirable:**

1. Knowledge of third language.
2. Work experience in SUN and FBS Financial Systems.

**A highly competitive remuneration package awaits the selected candidate.**
The above positions would be initially for a period of one year.

**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**
Please note that all positions are subject to transfer and that the age limit at SCiSL is 60 years.
The position applied for should be indicated on the top of your application and on the top left hand corner of the envelope. Applications should be sent with the names of two non related referees concerning work experience, on or before 15th August 2005 to:

**Save the Children**
in Sri Lanka

**Human Resources Unit**
**58A, Horton Place, Colombo 7**
**Only applicants selected for the interview will be contacted.**

(சி.12488)

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in over 100 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on **Education, Children Affected by Armed Conflict/Disaster** and **Social Harmony and Peace**. Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

# மம்தாபானர்ஜி பாராளுமன்றில் ஆவேசம்

## சபாநாயகர் ஆசனம் மீது காகிதக்கற்றைகளை வீசினார்



மக்களவையில் பேசஅனுமதி மறுத்ததால் திரினாமுல் காங்கிரஸ் தலைவி மம்தாபான்ர்ஜி பாராளுமன்றத்தில் குழப்பம் செய்தார். சபாநாயகர் மீது காகிதக் கட்டுகளை வீசினார். பின் இராஜினாமா கடிதத்தை சபாநாயகருக்கு அனுப்பினார். மக்களவையில் வாய்விட்டு கதறியழுத மம்தாவை நடிகைஜெயப்பிரதா தேற்றி ஆறுதல் கூறினார்.

பங்களாதேஷைச் சேர்ந்தமக்கள் சட்ட விரோதமாக ஊடுருவி மேற்கு வங்காளத்தில் குடியேறுவது பற்றி மக்களவையில் விவாதிக்க சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜியிடம் மேற்கு வங்காளத்தை சேர்ந்த திரினாமுல் காங்கிரஸ் தலைவி மம்தாபானர்ஜி ஒரு கவனஈர்ப்பு தீமானம் கொடுத்திருந்தார். நேற்று முன்தினம் மக்களவையில் கேள்வி நேரம் முடிந்ததும் மம்தாபானர்ஜி எழுந்து அந்தப் பிரச்சினை பற்றி பேசினார்.

அப்போது சபாநாயகர் இருக்கையில் இருந்த துணை சபாநாயகர் சரண்சித்சிங் அத்வால் குறுக்கிட்டு "இந்தப் பிரச்சினை பற்றி மக்களவையில் ஏற்கனவே நான்கு மணி நேரம் விவாதிக்கப்பட்டு விட்டது. உங்களது கவன ஈர்ப்பு தீமானத்தை சபாநாயகர் அனுமதிக்க வில்லை. எனவே இந்த பிரச்சினை பற்றி பேச உங்களுக்கு இப்போது அனுமதியில்லை" என்று கூறினார். ஆனால் மம்தாபானர்ஜி இதனை ஏற்க மறுத்து உணர்ச்சி வசப்பட்டவராய் தொடர்ந்து பேசினார்

அதற்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். மம்தாவைபேச அனுமதிக்க கூடாது என்று கோஷமிட்டனர். மம்தாவும் பதிலுக்கு கத்தினார். அதைத் தொடர்ந்து அவையை 25 நிமிடம் துணை சபாநாயகர் அத்வால் ஒத்தி வைத்தார்.

சபை மீண்டும் கூடியபோது மம்தா பேச எழுந்தார். மார்க்சிய கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் அதற்கு ஆட்சேபம் தெரிவித்து கோஷம் போட்டனர். இதனால் ஆத்திரம் அடைந்த மம்தா சபாநாயகர் இருக்கை அருகே சென்று கத்தினார். பின் தனது கையில் வைத்து இருந்த காகிதக் கற்றையை எடுத்து சபாநாயகர் மேசைமீது ஆவேசமாக எறிந்தார். பிறகு ஒரு காகிதத்தை எடுத்து சபாநாயகர் மேசை மீது வைத்து விட்டு தனது இருக்கைக்கு திரும்பினார்.

அதைத் தொடர்ந்து மார்க்சிய கம்யூஸ்டு உறுப்பினர்கள் எழுந்து மம்தா தனது செயலுக்குமன்னிப்பு கேட்க வேண்டும்.இதுபோன்ற செயல் பாராளுமன்ற வரலாற்றில் நடந்ததில்லை. அவரை கண்டிக்க வேண்டும் என்று ஒரே குரலில் வற்புறுத்தினார்கள் .

## நாங்கள் எந்த ஒரு நாட்டுடனும் இராணுவ ஒப்பந்தம் செய்யவில்லை

### - இந்திய பிரதமர் மன்மோகன்சிங்

நாம் எந்த நாட்டுடனும் இராணுவ ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. நாம் நமது அணுசக்தி திட்டத்தை யாரிடமும் சரண் அடையவிட மாட்டோம் நமது அணு ஆயுத தயாரிப்பு திட்டத்தில் எந்த நாட்டுடனும் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என இந்தியப் பாராளுமன்றில் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; அமெரிக்காவுடன் இந்தியா நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தால் சீனாவுடன் உள்ள உறவு தேயும் என்று யாரும் எண்ணவேண்டாம். சீனா மிகப்பெரிய நமது அண்டைநாடு ஆசியாவில் அமைதி வளம் கொழிக்க கம்யூனிஸ்ட் நாடான சீனாவுடன் நெருங்கிய நட்புறவு ஏற்படுத்துவோம்.

1991இல் தாக்கல் செய்த மத்திய வரவு செலவு திட்டத்திற்குபின் எனக்கு பெரும் சவாலாக இருந்து தற்போது மேற்கொண்ட அமெரிக்க பயணம்தான். அமெரிக்காவின் கட்டுப்பாடான தடைகளை நீக்கிய பின் நாம் அடுத்த 10,15 ஆண்டுகளில் 30ஆயிரம் முதல் 40 ஆயிரம் மெகாவாட் அணுமின் சாரத்தை தயாரிக்க முடியும்.

எனவே இந்தியா- அமெரிக்கா அணுசக்தி ஒப்பந்தம் பற்றியாரும் அச்சமோ கவலையோ படத்தேவையில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் தீவிரவாதிக்கு இந்தியா மரணதண்டனை



தூக்குத்தண்டனை பெற்றவர்

இந்தியப் பாராளுமன்றத்தை தாக்கிய வழக்கில் பாகிஸ்தான் தீவிரவாதிக்கு தூக்கு தண்டனையை உறுதி செய்தும், ஒருவருக்கு பத்தாண்டு சிறை தண்டனை விதித்தும் பெண் உட்பட இரண்டு பேரை விடுதலை செய்தும் உயர்நீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.

2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி ஐந்து பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் டில்லியில் உள்ள பாராளுமன்றத்தில் புகுந்து தாக்குதல் நடத்தினார்கள். அவர்கள் துப்பாக்கியால் சுட்டத்திலும் கையெறிகுண்டுகளை வீசியதிலும் பாதுகாப்புப் படையினர் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். 16 பேர் காயமடைந்தனர்.

தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் மொகமது, ஹைதர், ஹம்சா, ராணா, ராஜா ஆகிய ஐந்து பேரையும் பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொன்றனர். இந்த தாக்குதலுக்கு சதித்திட்டம் தீட்டிக்கொடுத்ததாக பாகிஸ்தானின் ஜெய்ஸ் இ-முகமது இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதி மொகத் அப்சல், சவுகத் ஹுசேன் குரு, அவரது மனைவி அப்சன் குரு, டில்லி பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.ஏ.ஆர்.ஹிலானி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது டில்லியில் உள்ள சிறப்பு பொடா நீதிமன்றில் விசாரணை நடந்தது குறிப்பிடத்தக்கது. இவர்களில் மொகமத் அப்துல் சவுகத் ஹுரேன் என்ற தீவிரவாதிக்கே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## இந்தியா எப்போதுமே சுதந்திரமான அணுசக்திக் கொள்கையை கடைப்பிடித்து வந்தது

### - முன்னாள் இந். பிரதமர் வாஜ்பாய்



இந்தியா எப்போதுமே சுதந்திரமான அணுசக்தி கொள்கையை கடைப்பிடித்து வந்திருக்கிறது. அதனால்தான் நாம் பொக்ரானில் அணுகுண்டு சோதனை நடத்த முடிந்தது. அணுசக்தி மின்நிலையங்களை உருவாக்க முடிந்தது புற்றுநோய் சிகிச்சைக்கு அணு சக்தியை பயன்படுத்த முடிந்தது என இந்திய முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அந் நாட்டு பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; அந்த அணுசக்தி கொள்கை நம்மீது திணிக்கப்படவில்லை 2003 ஆண்டில் ஏற்பட்ட ஒருமித்த கருத்து காரணமாக உருவாக்கப்பட்டது.

இப்போது அமெரிக்காவுடன் இந்தியா செய்துள்ள ஒப்பந்தம் அந்த வசதிகளை நமக்கு கொடுக்குமா என்பதை பிரதமரிடம் இருந்து அறிய விரும்புகிறேன். அமெரிக்கா உட்பட மற்ற வல்லரசுகள் இந்தியாவை ஒரு அணுஅயுத நாடாகவே ஏற்கவில்லை.

சிவில் உபயோகத்துக்கும் இராணுவ உபயோகத்துக்கும் அணுசக்தியை தனித்தனியாக இந்தியா பயன்படுத்துவதை அமெரிக்க ஒப்பந்தம் அனுமதிக்குமா? என்பது தெரிய வேண்டும். பயங்கரவாதம் நிறைந்த இந்த உலகில் நமது தேசிய நலனை பாதுகாக்க நாம் எந்த வசதியை பயன்படுத்துவோம் என்று சொல்லமுடியாது.

அமெரிக்காவுடன் செய்துள்ள இந்த ஒப்பந்தத்தால் நாம் அணு ஆயுதங்களை தயாரிக்க முடியாது. அதனால் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும்

இந்த ஒப்பந்தத்தில் இந்தியாவுக்கு மறைமுக நிபந்தனைகள் எதையும் அமெரிக்கா விதித்து இருக்கிறதா என்பதையும் பிரதமர் மன்மோகன்சிங் தெளிவு படுத்தவேண்டும் எனக் கோரினார் வாஜ்பாய்.

## மார்க்சிய கம்யூனிஸ்ட் உறுப்பினரின் நடவடிக்கை பாராளுமன்ற சபாநாயகரை ஆத்திரமூட்டியது

மக்களவையில் மார்க்சிய கம்யூனிஸ்ட் உறுப்பினர் வெளி நடப்பு செய்ததால் ஆவேசம் அடைந்த சபாநாயகர் சோம் நாத்சட்டர்ஜி "நான் பதவியை இராஜினாமா செய்து விடுவேன். புதிய சபாநாயகரை வைத்துக் கொள்ளுங்கள்" என்று ஆவேசமாகக் கூறினார்.

நேற்று முன்தினம் மக்களவையில் கேள்வி நேரத்தின் போது ஒரு பிரதான கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு துணைக்கேள்வி ஒன்றை மார்க்சிய கம்யூனிஸ்ட் உறுப்பினர் தரித் பரன் தோப்டார் கேட்டார். அந்த துணைக் கேள்வியை சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி அனுமதிக்கவில்லை. அதற்கு உறுப்பினர் தோப்டார் "நான் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் துணைக் கேள்வியை சபாநாயகர் அனுமதிக்கவில்லை. எனவே அதைக்கண்டித்து வெளிநடப்பு செய்கிறேன்" என்று கூறியபடி அவையை விட்டு வெளியேறத் தொடங்கினார்.

இதனால் ஆவேசம் அடைந்த சபாநாயகர், இது ஆச்சரியமாக இருக்கிறது. பெரிய தொந்தரவாக உள்ளது. நான் வேண்டுமானால் சபாநாயகர் பதவியை இராஜினாமாச் செய்து விடுகிறேன். நீங்கள் புதிய சபாநாயகரை வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அப்போது தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் ஜெய்ப்பால் ரெட்டி எழுந்து சபாநாயகரை அமைதிப்படுத்தினார்.

இதுபோன்ற சம்பவங்களால் நீங்கள் ஆத்திரப்படுவீர்கள் என்று நான் நினைக்கவில்லை. நீங்கள் அமைதி காக்க வேண்டுமென்று ஜெய்ப்பால் ரெட்டி கூறினார்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 - 11 - 1939



உதிர்வு 17 - 08 - 2004

அமரர்

இளையதம்பி தெய்வமணி

வேம்படி தாளையடி

ஆலமரச் சோலையிலே –நாம்
ஆனந்தமாய் கூடி மகிழ்ந்திட
பாசமெனும் வேதமதை
பாலோடு எமக் கூட்டி
நேசமாய் நாம் வாழ
நேர்வழி காட்டிய தெய்வமே...
ஆசைக்கு ஐயா, பிள்ளைகளும்
அன்புகாட்டிட மருமக்களும்
அள்ளி அரவணைத்திட பேரக்குழந்தைகள்
பூட்டக் குழந்தைகளும் – ஒற்றுமையாய்
ஒன்று சேர்ந்து நின்றவேளை

மலைபோன்ற இடியொன்று
எம்மீது விழுந்ததம்மா...
பாதியிலே உன் பணி முடித்து
பறந்தோடி சென்றதேனோ
எம் குடும்பத்தின் குலவிளக்கே...
உன் ஒளியிழந்து இருட்டினில் தவிக்கிறோம்
ஆண்டொன்றென்ன ஆயிரம் ஜென்மங்கள் ஆனாலும்
எம் நெஞ்சமெனும் ஆலயத்தில்
நீ வாழ்வாய் எம் தெய்வமாய்..
அழியாத உன் நினைவோடு
ஒன்றாக நாம் வாழ்வோம்..

இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்

த.மு. நிகல்யா புடவையகம்
விசுவமடு.

தகவல்:-
குடும்பத்தினர்

(6521)



முள்ளிவாய்க்கால் மேற்கு
ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய
வருடாந்த ஆடிப்பூர உற்சவம்

எதிர்வரும் 07.08.2005 ஞாயிற்றுக்கிழமை அன்று பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த ஆடிப்பூர உற்சவவிழா ஆரம்பித்து 09.08.2005 செவ்வாய்க்கிழமை நிறைவெய்தும். அடியார்கள் அனைவரும் வருகை தந்து அன்னையின் அருளைப் பெற்றேகுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முள்ளிவாய்க்கால் -மேற்கு
முல்லைத்தீவு.

ஸ்ரீ பத்திரகாளியம்மன்
ஆலயத்தினர்.

(6522)

# கொரிய சமாதான விளையாட்டுப் போட்டி சாதனை படைத்த நிரஞ்சனுக்கு பாராட்டு


நிரஞ்சன்

கொரியாவில் நடைபெற்ற சர்வதேச மதங்களுக் கிடையேயான விளையாட்டு விழாவில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சகாயராஜா நிறஞ்சன் 400 மீற்றர், 800 மீற்றர் போட்டிகளில் தங்கப்பதக்கத்தை வென்றுள்ளார். இதே போன்று திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ரவீந்திரன் ரதீசன் நீளம் தாண்டுதலில் முதலாம் இடத்தைப்பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

கொரியா, மலேசியா, தாய்வான், ரஷ்யா, சல்பேனியா, மொங்கோலியா, பிலிப்பைன்ஸ், எஸ்தேனியா இந்தியா, சிறிலங்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் இளையோருக் கிடையேயான சமாதானத்தை வலியுறுத்தி ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்தப் போட்டிகளில் இலங்கை வீரர்கள் 11 தங்கப்பதக்கங்களையும், நான்கு வெள்ளிப்பதக்கங்களையும், ஏழு வெண்கலப்பதக்கங்களையும் பெற்றுள்ளனர்.


ரதீசன்

இவர்களில் தமிழர் தாயகத்தைச் சேர்ந்த நிறஞ்சன் இரண்டு தங்கப்பதக்கங்களையும், றதீசன் ஒரு தங்கப்பதக்கங்களையும் பெற்றுள்ளனர். அத்தோடு வெள்ளிப்பதக்கங்கள் பெற்றுக்கொண்ட 4x400 மீற்றர் அஞ்சல் குழுவிலும் இவர்கள் இடம்பெற்றிருந்தனர்.

இதேவேளை நேற்று காலை புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியில் ச.றஞ்சனுக்கு பாடசாலைச் சமூகம் வரவேற்பையும், பாராட்டு நிகழ்வையும் வழங்கியிருந்தது. தமிழர் தாயத்தைச் சேர்ந்த இப்போட்டியாளர்களின் வெற்றி பல்வேறு தடைகளைத்தாண்டி எமது அடையாளத்தின் கௌரவமான இருப்பை உலகிற்கு உணர்த்தும் செயற்பாடாக அமையுமென தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகளின் பயண ஏற்பாடுகளுக்கென இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினர் ரூபா இரண்டு இலட்சத்தினை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## கிளிநொச்சி ம.வி. புது. மத்திய கல்லூரி அணிகள் மோதும் கடினப்பந்துப் போட்டி

புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியின் பொன்விழாவை சிறப்பிக்கும் வகையில் கிளிநொச்சி மகாவித்தியாலய 17 வயது அணிக்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 19 வயது அணிக்கும் இடையிலான கடின பந்து கிரிக்கெட் போட்டி ஒன்று நாளை நடைபெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் மேற்படி போட்டி நாளை காலை நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (சி)

## புது. மத்தியகல்லூரி பொன்விழா மென்பந்து இறுதிப் போட்டி இன்று

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் கழகங்கள் மற்றும் பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்றுவந்த மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகும் மேற்படி போட்டிகளில் கழகமட்டத்தில் தோழர்கள், வித்தியா அணிகள் மோதுகின்றன. (சி)

## பாடசாலை அணிகளுக்கிடையிலான அகில இலங்கை கால்பந்துப் போட்டி

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனமும், அகில இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச்சங்கமும் இணைந்து நடாத்தும் 15 வயதுக் குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான அகில இலங்கை ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இம் மாதம் வென்னப்புலவில் நடைபெறவுள்ளது போட்டியில் யாழ். மாவட்ட அணியும் பங்குகொள்ளவுள்ளது.

இந்த மாவட்ட அணியில் பங்கேற்கும் 15 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவதற்கான பயிற்சிகள் இன்றும்,நாளையும் யாழ். பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

வென்னப்புலவில் இம் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ள இந்த போட்டியில் பங்குபற்றவிருக்கும் விளையாட்டு வீரர்கள் தெரிவு செய்யப்படவிருப்பதால் நடைபெறவுள்ள பயிற்சியில் 15 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட வீரர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை கேட்டுக்கொண்டுள்ளார். (கீ)

## சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி

சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான மட்டக்களப்பு இராமகிருஸ்ணமிஷன் சிவானந்த வித்தியாலயத்திற்கும், திருகோணமலை இராமகிருஷ்ண ஸ்ரீகோணேஸ்வரா இந்துகல்லூரிக்கும் இடையேயான வருடாந்த மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் கு. திலகரத்தினமும், கௌரவிருந்தினராக சிலிங்கோ ஆயுள்,காப்புறுதிக் கூட்டுத்தாபன திருமலை மாவட்டமுகாமையாளர் ஆர். ரவிசரோஷன் ஆகியோரும் பங்கேற்பர். (25)




## கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு சங்கங்களுக்கிடையில் தாச்சிப் போட்டி

சர்வதேச கூட்டுறவாளர்களின் 83ஆவது ஆண்டு விழாவையொட்டி வலிகாமம் கொத்தணியினர் தமது அங்கத்துவ சங்கங்களுக்குமிடையே தமிழர் தேசிய விளையாட்டான தாச்சி விளையாட்டுப் போட்டியை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் மானிப்பாய் ஆனந்த விளையாட்டுக்கழக மைதானத்தில் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

அங்கத்துவ சங்கங்களான பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, சுன்னாகம், சங்கானை, கோண்டாவில், காரைநகர், மானிப்பாய் பிரதேச சங்கங்கள் இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (41)

## மாபெரும் மாட்டுவண்டி சவாரிப்போட்டி

முல்லை. மாவட்டத்தில் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி முல்லை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாளை நடத்தப்படவுள்ளது.

விசுவமடு தொட்டியடியில் அமைந்துள்ள மாட்டுவண்டிச் சவாரித்திடலில் இப்போட்டி இடம்பெறவுள்ளது.ஏ.பி.சி.டி. என்ற பிரிவு அடிப்படையில் போட்டியும், கைக்கொடியில் மாடு கொண்டு ஓடுதல் போட்டியும் நடைபெறவுள்ளது.

போட்டியில் ஈடுபட விரும்புபவர்கள் விசுவமடு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என விசுவமடு பிரதேசபொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் கார்த்திக் தெரிவித்துள்ளார். (19)

## ஆஷஸ் கிண்ண இரண்டாவது போட்டி இங்கிலாந்து ஒரே நாளில் 407 ஓட்டம்



இங்கிலாந்து அவுஸ்திரேலிய அணிகளுக் கிடையிலான ஆஷஸ் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் எட்பாஸ்டனில் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் அவுஸ்திரேலிய தலைவர் பொண்டிங் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.இதில் இங்கி லாந்து அபார தொடக்கம் கண்டது. ரெஸ்கொதிக், ஸ்ரோஸ் முதல் விக்கெட்டுக்கு 112 ஓட்டங்கள் சேர்த்தனர். பின்னர் கஸ்பரோவிச் ஒரே ஓவரில் இரண்டு விக்கெட் வீழ்த்தி திருப்புமுனை ஏற்படுத்தினார். இதற்குப் பின் இளம் பீட்டர்சன், பிளிண்டொப் இணைந்து அணியை மீட்டனர்.



இவர்கள் ஒரு நாள் போட்டி பாணியில் அதி விரைவாக ஓட்டம் சேர்த்தனர். வோர்ன் பந்திற்கு மூன்று சிக்சர் விளாசிய பிளிண்டொப் 68 ஓட்டமும், பீட்டர்சன் 71 ஓட்டமும், பெற்றனர். பின்னர் வந்தவர்கள் வோர்னின் சுழலில் வெளியேறிய போதும் அடித்தாடி ஓட்டம் சேர்த்தனர். இறுதியில் இங்கி லாந்து அணி முதல் இன்னிங்சில் 407 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. பின்னர் மழை குறுக்கிட, முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அவுஸ்திரேலிய தரப்பில் வோர்ன் நான்கு, கஸ்பரோவிச் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.


அவுஸ்ரேலியாவின் நம்பிக்கை பந்து வீச்சாளர் மெக்ராத் பயிற்சியின்போது காயமடைந்து மைதானத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட காட்சி. தற்போது நடைபெற்றுவரும் இரண்டாவது ஆஷஸ் போட்டியில் மெக்ராத் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய அணியின் நன்மைக்காகவே தொடக்க ஆட்டத்தை கைவிட்டேன்


கங்குலி

இந்திய அணியின் நன்மைக்காகவே தொடக்க ஆட்ட வாய்ப்பை விட்டேன் என்று கங்குலி கூறியுள்ளார்.

நீண்ட இடைவெளிக்கு பின் தொடக்க வீரராக களம் கண்ட கங்குலி அரைச் சதத்தை எட்டிப் பார்த்தார்.இந்த நிலையில் கங்குலி அளித்த பேட்டியில் கூறியதாவது:

ஒருநாள் போட்டியில் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. நான் கடந்த ஒன்பது ஆண்டுகளாக விளையாடி வருகின்றேன். மேலும் ஓட்டம் குவிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்தது உடனடியாக எனக்குத் தெரியாது. இது ஒரு பெரிய சாதனையாகும்.

கடந்த சில வருடங்களாக நான் தொடக்க ஆட்டத்தில் தொடர்ந்து ஆடவில்லை அந்த நிலையில் டெண்டுல்கர் ,ஷேவாக் சிறப்பாக ஆடியதால் நான் அதனை துறந்தேன் தொடக்க வீரராக ஆடி நான் எண்ணாயிரம் ஓட்டம் சேர்த்தேன். அணிக்காக தொடக்க ஆட்டத்தை கைவிட்டேன் இதனால் அதிக ஓட்டம் பெறுவது பாதிக்கப்பட்டது.

இந்திய அணி இந்த ஆட்டத்தில் தோற்றது ஏமாற்றம் அளித்தது. நல்ல நிலையில் இருந்து தோற்றோம் உள்ளோம் நாம் சரியாக பந்து வீசவில்லை இவ்வாறு கங்குலி கூறினார்.

## இந்திய வீரர்களை நினைக்கும்போது ஆச்சரியமாகவுள்ளது. –முரளி



முத்தரப்புத் தொடரில் இந்திய துடுப்பாட்டகாரர்கள் ஆதிக்கம் செலுத்தத் தவறியது மிகுந்த ஆச்சரியம் அளிப்பதாக சுழல்பந்து வீச்சாளர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இதற்கான காரணத்தை தெளிவாக சொல்வது சிரமமான காரியம். நீண்ட ஓய்வுக்கு பிறகு விளையாடுவது பாதிப்பை ஏற்படுத்தியிருக்கலாம்.

தம்புள்ள ஆடுகளம் எப்போதுமே பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானது 220 முதல் 230 வரை எடுத்தாலே எளிதான வெற்றி பெறலாம். இந்தச் சூழலில் ஜெயவர்த்தன சந்தனவின் அற்புத ஆட்டம்தான் இலங்கைக்கு வெற்றிபெற்றுத்தந்தது. பந்துவீச்சளர்களும் துல்லியமாகப் பந்து வீசினர். குறிப்பாக டில்ஷின் பிரமாதமாக செயற்பட்டார். இவரைச் சமாளிக்க முடியாமல் இந்திய வீரர்கள் திணறியதைக் காண முடிந்தது. ஏற்கனவே இறுதிப் போட்டிக்கு முன்னேறியதால் எனக்கு ஓய்வு தரப்பட்டது. பதிலாக இளம் வேகம் ஜெயபிரகாஷ்தரன் களமிறக்கப்பட்டார் ஒரு விக்கெட் வீழ்த்திய இவர் வெறும் 21 ஓட்டம் கொடுத்து தனது பணியை திறம்படச் செய்தார்.



## சிந்தனைக்கு

*தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம்; தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.*

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 06.08.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மி. அஞ்சல் natham23 ela@ yahoo.com

## எரிமலை மீது...!

யாழ்.இணுவில் சந்திப்பகுதியில் கந்தசுவாமி கோவிலடியில் ஒரு சிகையலங்காரத் தொழிலாளி சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானதைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்றமானதொரு சூழ்நிலையில், யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் கடத்தப்பட்டுக்கொல்லப்பட்ட சம்பவமானது தமிழ்மக்கள் எந்தளவிற்குச் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பின் மீது வெறுப்புடனும், சீற்றத்துடனும் உள்ளனர் என்பதை சகலரும் புரிந்து கொள்வதற்கு தக்கதொரு சந்தர்ப்பம் ஆகும்.

இச்சம்பவம் முதலில் வெளிப்படுத்தி நிற்பது, சிறிலங்கா ஆயுதப் படையினர் மீதான தமிழ்மக்களின் சீற்றத்தையும், வெறுப்பையும் தான். அதாவது இச்சம்பவம் இடம் பெற்றதுமே மக்களின் சீற்றமும் வெறுப்பும் வெளிப்பட்டது. துப்பாக்கிச்சூடு நடத்திய சிப்பாயையும் அவருடன் கூட வந்த இராணுவத்தினரையும் பிடிப்பதற்காக மக்கள் துரத்திச் சென்றுள்ளனர். ஆனால் துப்பாக்கிதாரிகளான இராணுவத்தினரை துரத்திச் செல்வது எவ்வளவு அபாயகரமானது என்பது மக்களுக்குத் தெரியாததும் அல்ல. இருந்தும் சீற்றத்தினால் செய்தனர்.

அடுத்ததாக உடனடியாகவே வீதி மறியலில் ஈடுபட்டு போக்குவரத்தைத் தடைசெய்துள்ளனர். இது மக்கள் கிளர்ந்தெழாமல் நடக்கக்கூடியதொன்றல்ல. அதனைத் தடுக்கவும், கலைக்கவும் ஆயுதப்படையினர் மேற்கொண்ட முயற்சி தோல்வியுற்றது. கண்ணீர்ப் புகைக் குண்டுகள், தடியடி என்பன நடத்தப்பட்ட வேளையிலும் தமது எதிர்ப்பை மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ் எதிர்ப்பின் உச்சகட்டமாகவே யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் கடத்திச்செல்லப்பட்டு பின்னர் கொல்லப்பட்டுள்ளார். இதன் மூலம் சிறிலங்கா ஆயதப்படையினர் மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள வெறுப்பின் உச்சத்தை மட்டுமல்ல, அவர்கள் எந்தவித அச்சுறுத்தலுக்கும் பணியப்போவதில்லை என்பதையும் வெளிக்காட்டியுள்ளது.

இச்சம்பவமானது சிறிலங்கா ஆயுதப்படையினருக்கு சில விடயங்களைத் தெளிவாகவே புரியவைத்திருக்கும். அவ்வாறு இல்லாவிடில் அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். இதில் முதலாவது தாம் அந்நிய மண்ணில் ஆக்கிரமிப்பாளர்களாக நிற்கின்றோம் என்பது. இரண்டாவது தாம் கூறும் எத்தகைய நியாயப்பாடுகளும் தமிழ்மக்களினால் ஏற்றுக்கொள்ளப்படப்போவதில்லை என்பது. அடுத்ததாக மக்கள் தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தும் போது ஆயுதப்படைத்தரப்பால் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ள முடியாது என்பது.

இதில் முதலாவதாக சிங்கள இராணுவத்தின் ஒவ்வொரு செயலுக்கும் மக்கள் வீதிகளில் இறங்கி தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்துவதானது, சிறிலங்கா ஆயுதப்படையோ, அதன் பொலிசாரோ ஆக்கிரமிப்பாளர்கள் என்ற உணர்வின் வெளிப்பாடே ஆகும். இவர்கள் தம் மீது அதிகாரத்தைத் திணிக்கின்றனர். என்பதே மக்களின் உணர்வாகும்.


அடுத்ததாக சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்போ அன்றி அரசாங்கமோ கூறும் எந்தவித விளக்கத்தையோ அன்றி நியாயப்பாட்டையோ ஏற்பதற்குத் தமிழ் மக்கள் தயாராக இல்லை என்பது. அதாவது விபத்திற்கோ அன்றித் துப்பாக்கிச் சூட்டிற்கோ ஆயுதப்படைத்தரப்பு கூறும் எத்தகைய காரணத்தையும் மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பது. அவை ஆக்கிரமிப்பாளர்களின் ஒடுக்குமுறை வடிவம் என்பதே மக்களின் வெளிப்பாடு.

மூன்றாவதாக மக்களின் உணர்வுகள் எதிர்ப்பலையாகக் கிளம்பும் போது– வெடிக்கும் போது எத்தகைய பலம் பொருந்திய ஆயுதப்படையாயினும் தமது பாதுகாப்பையே உறுதிப்படுத்த முடியாது போய்விடும் என்பது. இதற்கு உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் உதாரணமாகும். அதாவது ஆக்கிரமிப்பாளர்களுக்கு மக்கள் மட்டுமல்ல ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணும், சூழலும் [illegible] பாதுகாப்பையோ மறைவிடத்தையோ அளிக்கப்போவதில்லை [illegible]

இவ்வெறுப்பும், சீற்றமும் சம்பவத்தின் பாற்பட்டதன் விளைவாக அல்ல, ஒட்டு மொத்தமான மக்களின் உணர்வாகவே உள்ளது. அவ்வாறு இல்லாது விட்டால் யாழ்.குடாநாட்டில் இராணுவத்தின் அராஜகச் செயல் எங்கு ஏற்பட்டாலும் அதற்கான உடனடி எதிர்ப்பினை அப்பகுதியில் மக்களால் வெளிப்படுத்தப்படுவது சாத்தியமானதாக இருக்கமாட்டாது.

இத்தகையதொரு நிலைக்குத் தனியாகத் தமிழர் தாயகத்தில் குடிகொண்டுள்ள ஆயுதப்படையினரின் அராஜகமும், அடாவடித்தனமும் தான் காரணம் என்பதல்ல. கொழும்பிலுள்ள சிங்கள அரசியல் தலைவர்களின் நடவடிக்கைகளும் காரணமாகும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வென்பதைப் புறந்தள்ளி வரும் அவர்களின் நடவடிக்கைகளினால் மக்கள் பெரும் சீற்றத்திற்கும் சினத்திற்கும் உள்ளாகியுள்ளனர். நாம் ஏமாற்றப்படுவதாக அவர்கள் நம்புகிறார்கள்.

இதனால் ஒட்டுமொத்த சமாதான முயற்சி களிலும் அவர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். தமது எதிர்ப்பை எவ்வகையிலும் வெளிக்காட்டியே ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இத்தகையதொரு எதிர்ப்பே இணுவிலிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்போ, அரசாங்கமோ சரியாகப்புரிந்து கொள்ளாது போனால் எதிர்காலத்தில் தமிழர் தாயகத்தில் சிங்கள ஆயுதப்படையினர் தமக்கான பாதுகாப்பைத் தேடிக்கொள்வது கடினமானதாகவே இருக்கும். எரிமலை மீது குடியமர்ந்து விடலாம் என எண்ணுவது மடமையாகும்.




# ஐ.நா.பாதுகாப்பு சபையில் நிரந்தர அங்கத்துவம்; கோரும் நாடுகளினால் சிறிலங்காவுக்கு நெருக்கடி!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் கோரும் இந்தியா உள்ளிட்ட ஜி-4 நாடுகளுக்கு ஆதரவு வழங்குமாறு கோரும் இந்தியாவின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதில் சிறிலங்கா அரசாங்கம் சிக்கலை எதிர்நோக்கியிருக்கிறது. இதனால், இது குறித்த தமது முடிவை சிறிலங்கா அரசாங்கம் இதுவரையில் உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை என்றும் தெரியவருகிறது. 15 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில், மேலதிகமாக ஆறு நிரந்தரஉறுப்பு நாடுகளையும், நான்குநிரந்தரமற்ற உறுப்பு நாடுகளையும் இணைத்து, அந்த எண்ணிக்கையை 25ஆக உயர்த்தவேண்டும் என்று ஜி-4நாடுகள் கோருகின்றன. இந்தியா, ஜேர்மன், ஜப்பான், பிரேசில் ஆகிய நாடுகள் இந்த ஜி-4 நாடுகள் குழுவில் இடம் பெறுகின்றன. சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் இந்திய விஜயம் மேற்கொண்ட போது, பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை வழங்கும் கோரிக்கைக்கு ஆதரவு வழங்குமாறு அவரிடம் இந்திய அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது. ஜி-4 நாடுகளில் அடங்கும் இந்தியா, ஜப்பான், ஜேர்மன் ஆகிய மூன்று நாடுகளும் சிறிலங்காவுக்கு பொருளாதார ரீதியாக பாரிய உதவிகளை வழங்கி வரும் நாடுகள் என்பதால் இந்த நாடுகளின் கோரிக்கையை நிராகரிக்கமுடியாத நிலையில் சிறிலங்கா இருக்கிறது. ஆனாலும், மறுபுறத்தே பாதுகாப்புச் சபையை விஸ்தரிக்கும் ஜி-4 நாடுகளின் கோரிக்கைக்கு சீனா, பாகிஸ்தான், இத்தாலி ஆகிய நாடுகள் தீவிர எதிர்ப்புக்காட்டி வருகின்றன. இதில், சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடனான இராஜதந்திர உறவுகளும் சிறிலங்கா அரசாங்கத்துக்கு மிகவும் முக்கியமானது.

இந்த நிலையில், இந்த விவகாரம் குறித்து ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதில் சிறிலங்கா அரசாங்கம் சிக்கலை எதிர்நோக்கியிருப்பதாக அரசாங்கத்தின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டபோது, சர்வதேச நாடுகளிடையே இருந்த வலுச்சமநிலை சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் பாதிக்கப்பட்டிருப்பதால், இப்போது ஐக்கிய நாடுகள் சபையை மறுசீரமைப்பது அவசியமானது என்று வலியுறுத்துபவர்கள் ஜி-4 நாடுகளின் கோரிக்கையை ஆதரித்து வருகின்றனர். எனினும் இது அபிவிருத்தியடைந்துவரும் அனைத்து நாடுகளினதும் நன்மைக்காகவன்றி, ஒரு சில நாடுகளின் சுயநலனுக்காக விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை என்று தெரிவிக்கும் சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள், இந்தக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. இந்தக் கோரிக்கை ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்படுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவான 128 நாடுகளின் ஆதரவை, பொதுச்சபை உறுப்பு நாடுகளான 191 நாடுகளிடமிருந்து ஜி-4 நாடுகளினால் பெற முடியாது என்றும் இவை நம்பிக்கை வெளியிட்டுள்ளன. எனினும், சர்வதேச பாதுகாப்பிலும், சமாதானத்திலும் செல்வாக்கு செலுத்தும் நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இடம்பெறுவதற்கு உரிமையுண்டு என்று தெரிவிக்கும் ஒருசாரார், ஜி-4 நாடுகளின் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த விடயம் இப்போது ஒரு சர்வதேச சர்ச்சையாக்கப்பட்டிருப்பதால், இந்த விடயத்தில் எவ்வாறான முடிவை எடுப்பது என்பதில் சிறிலங்கா போன்ற சிறிய நாடுகள் நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# முதலில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் சு.க.வின் பிரதமர் வேட்பாளர் நிலை?

## - ஐ. தே. க. கேள்வியெழுப்புகிறது

(கொழும்பு)

அரசாங்கம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நிறுத்தப்படுவார். அவ்வாறு ஒருநிலை ஏற்பட்டால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் யார் என்று வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கெகலிய ரம்புக்வெல்ல கேட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் வியாழக் கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இந்த கேள்வியை எழுப்பினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பிற்கமைய கட்சித் தலைவர் சனாதிபதி வேட்பாளராக நியமிக்கப் பட்டால் கட்சியின் உபதலைவர் பிரதமர் வேட்பாளராவார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு பல பிரதமர் வேட்பாளர்கள் இருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அவ்வாறான ஒரு பிரச்சினையும் இல்லை. முதலில் சனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டபின் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால் பிரதமர் வேட்பாளராக பிரதித்தலைவர் நியமிக்கப்படுவார் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கெகலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் சனாதிபதி வேட்பாளரை நியமித்துள்ள நிலையில் ஜே.வி.பி மௌனம் சாதித்து வருவதனால் அவர்களின் நிலைப்பாடு என்ன என்பதை உடனடியாக நாட்டிற்குத் தெரியப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேட்டுள்ளார்.

சனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களின் முதலாவது கூட்டம் நேற்று முன்தினம் தம்புள்ளையில் ஆரம்பமான போது அவர் இதனை தெரிவித்தார்.

இருபிரதான கட்சிகளினதும் சனாதிபதி வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்ட பிரதிப் பொதுச் செயலாளர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவிற்கு அரச ஊடகங்களைப் பயன்படுத்தி மாபெரும் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

# புகையிரத பொது ஊழியர் சங்கம் 18 கோரிக்கைகளுடன் போராட்டம்

(கொழும்பு)

இலங்கை புகையிரத திணைக்களத்தின் 17,000 ஊழியர்களின் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்காகவும், மேலும் 18 கோரிக்கைகளை முன்வைத்து இம்மாதம் 10 ஆம் திகதி அரசுக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளப் போவதாக புகையிரத பொது ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இப்போராட்டத்தில் இணைந்து கொள்வதற்கு மேலும் 18 தொழிற்சங்கங்கள் முன்வந்துள்ளன. எமது கோரிக்கைகளை சனாதிபதிக்கும், போக்குவரத்து அமைச்சருக்கும் பல முறை அறிவித்தும் இதற்கு பதில் கிடைக்காதபடியால் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக ரயில்வே பொது ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

# நாரஹேன்பிட்டி ஈ.பி.டி.பி.யினர் முகாமிற்குள் குண்டுவெடிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா தலைநகர் கொழும்பில் நாரஹேன்பிட்டிய பகுதியில் அமைந்திருக்கும் ஈ.பி.டி.பி தேசவிரோதக் குழுவின் முகாமிற்குள் நேற்று முன்தினமிரவு குண்டுவெடிப்பு ஒன்று நிகழ்ந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரவு 11.45 மணியளவில் வெளியிலிருந்து தமது முகாமிற்குள் வீசப்பட்ட கைக்குண்டே வெடித்துள்ளதாக ஈ.பி.டி.பி தேசவிரோதிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் ஈ.பி.டி.பி தேசவிரோதக் குழுவின் உறுப்பினர் ஒருவர் வைத்திருந்த குண்டே வெடித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தக் குண்டு வெடிப்பின் போது ஈ.பி.டி.பி தேசவிரோதிகளிற்கு பாதிப்பு ஏதாவது ஏற்பட்டதா, என்பது குறித்த தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

இதேவேளை வாழைச்சேனையிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கு அருகாமையில் நேற்று முன்தினம் இரவு எட்டுமணியளவில் குண்டு வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.இச்சம்பவத்தின் போது எத்தகைய சேதங்களும் யாருக்கும் ஏற்படாத போதிலும் அருகிலுள்ள வீடொன்றிலுள்ள தந்தையும், மகளும் பொலிசாரால் தாக்கப்பட்டுள்ளார்கள்.

## கடனுதவி வழங்கல்

கடற்கோளினால் பாதிக்கப்பட்டோருக்கு தமிழீழ வைப்பகத்தின் உறுதுணையுடன் இளவேனில் வாணிபத்தினர் , இராசன் கடலுணவு வாணிபத்தினர் இன்று கடனுதவிகளை வழங்கவுள்ளனர்.

இன்று முற்பகல் 11.00 மணிக்குகிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள கடலுணவு வாணிபத் தில் இக்கடன் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

## வெதுப்பியின் விலை மாற்றம்

வன்னிப்பகுதியில் வெதுப்பியின் விலை இன்று முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. உலரெடை 350 கிராமாகவுள்ள வெதுப்பியின் விற்பனை விலை 18 ரூபாவாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப்பகுதி அறிவித்துள்ளது. இவ்விலைக்கமைய இன்று முதல் விற்பனை செய்யுமாறு வாணிப உரிமையாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## தொழில்நுட்ப...

திட்டமிடலுக்கும், மேம்பாட்டிற்குமான செயலகத்தைச் சேர்ந்த ரஞ்சன் திறந்துவைத்தார். மொழித்திறன் கட்டடத்தை கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா திறந்து வைத்தார். உடற்பயிற்சிக்கான கட்டடத்தை பொன்.நித்தியானந்தன் திறந்துவைத்தார்.

தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சுகுணன் தலைமையில் ஆரம்பமாகின. இதில் முதல் நிகழ்வாக மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது. அடுத்து அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் தனது கருத்துரையில்; இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான தொழில் நுட்பப் பயிற்சிகள் எமது நாட்டிற்கு மிகவும் அவசியமாகும் என்றார். இதில் முதலாம் கட்டப் பயிற்சியை முடித்து வெளியேறும் மாணவர்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு, இக்கட்டடத்தை அமைத்து சகல தொழில் நுட்பத்தரவுகளை வழங்கியுதவிய ரி. ஆர் ரெக் நிறுவனத்திற்கு தமிழீழ தேசியத் தலைவரின் சார்பில் நன்றியைத் தெரிவித்ததோடு, இவ்வாறான திட்டங்கள் தமிழீழத்தின் ஏனைய பகுதிகளிற்கும் விரிவாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அடுத்து ரி. ஆர் ரெக் நிறுவனத்தின் பொருளாளர் ரகுராஜ் உரை நிகழ்த்தினார். அதனைத்தொடர்ந்து லண்டன் சிற்றி கில்ட்ஸ்அன்ரன், கல்விக் கழகப் பொறுப்பாளர், அரசியல்துறை மகளிர்பொறுப்பாளர் ஆகியோரின் சிறப்புரைகள் இடம்பெற்றன. அடுத்து 2004,2005 ஆம் ஆண்டில் ஆங்கிலக்கல்வி, கணினி தொழில்நுட்பப் பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பிரதாப் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முதற்கட்டமாக 126 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அடுத்து ரி. ஆர் ரெக் கணினி விரிவுரையாளர் செல்வி. நித்தியா தலைமையில் மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து பொருண்மியமதியுரையக பணிப்பாளர் சுந்தர மூர்த்தியின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன. அதனைத் தொடர்ந்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர்சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களால் மென்பொருள், வன்பொருள், இலத்திரனியல், மொழித் திறன் விருத்தி போன்ற கண்காட்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. கண்காட்சி இன்றும் நாளையும் ரி.ஆர் ரெக் மண்டபத்தில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (கு)

## சிங்களதேசம்....

மிகத்தெளிவாக விளக்கியிருக்கின்றோம்.

***யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை பற்றி ஏதாவது பேசப்பட்டதா?**

யாழ்ப்பாணம் மட்டுமல்ல பொதுவாக தமிழர் தாயகப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைபற்றி பேசியிருக்கிறோம். அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட நெருக்கடி நிலை பற்றியும் ஆராய்ந்தோம். அவர்களுக்கு அந்தப் பகுதிகளின் நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்திக் கூறியிருக்கிறோம். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் என்று சொல்லப்படுகின்ற பகுதிகளுக்குள் இராணுவத்தின் நெருக்குவாரங்கள், அச்சுறுத்தல்கள், கொலை முயற்சிகள், கொலைகள் என்பன தொடர்ந்து நடைபெறுவதால் மக்கள் மத்தியில் ஒரு பெரும் குழப்ப நிலை-கொந்தளிப்பு நிலை உருவாகியிருக்கிறது. அதனுடைய வெளிப்பாடாகத்தான் நேற்று நடைபெற்ற சம்பவங்களை நாம் பார்க்கிறோம்.

இருப்பினும் இந்தச்சம்பவங்கள் பற்றியும், அவற்றின் உண்மைத் தன்மை பற்றியும் முழு அளவில் அறியமுடியாதிருக்கிறது. அங்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு போக்குவரத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. இதனால் எங்களுடைய போராளிகளுடன் தொடர்புகொண்டு அவர்களைச் சந்தித்து நிலைமைகளை அறிய முடியாதிருக்கிறது. அங்கு பாரிய நெருக்கடி நிலை உருவாகியிருக்கிறது. நிலமைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம். இந்தப் பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமாகையால் அங்கு இராணுவமும், அவர்களின் சட்டம்,ஒழுங்கை பாதுகாக்கின்ற அமைப்புக்களினுடைய செயற்பாடுகளினூடாகத்தான் அதனை ஓரளவு கொண்டுவர முடியும் என்று நினைக்கின்றேன்.ஆனால் அவர்களே இந்தச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் எவ்வளவு தூரம் நிலைமைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும் என்பது பற்றி எங்களால் கூறமுடியாதிருக்கிறது. ஆகவே நிலைமைகளைப் பற்றி நாங்கள் ஆராய்ந்திருக்கிறோம். கண்காணிப்புக்குழுவுடனும் ஏனைய சம்பந்தப்பட்டவர்களுடனும் நாங்கள் தொடர்புகளைத் தொடர்ந்து பேணிக்கொண்டு இதற்கான முயற்சிகளைச் செய்யவிருக்கிறோம்.

*** போர்நிறுத்த ஒப்பந்த செயற்பாடுகள் நாளுக்குநாள் மோசமடைந்து செல்கிறது. இந்த நிலையில் நோர்வேயின் உயர்மட்டக் குழுவினர் உங்களைச் சந்தித்திருக்கிறார்கள். எனவே இதில் முக்கியமாக என்ன பேசினீர்கள் .அரசிடம் இருந்து ஏதாவது தகவல்கள் வந்தனவா?**

நோர்வே உயர்மட்ட தூதுக்குழுதான் இன்று வருகை தந்திருந்தது. இவர்கள் சமாதான முயற்சிகளில் முக்கிய பங்கு வகிப்பவர்கள். அவர்களுக்கு நிலைமைகளைத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். யுத்த நிறுத்த உடன்படிக்கை என்பது நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு கருத்துக்கள் பரிமாறப்பட்டு நடைமுறைச் சாத்தியமான நிலையில் இந்த உடன்பாடு கொண்டு வரப்பட்டது. ஆகவே இந்த உடன்படிக்கையை இரண்டு தரப்பினரும் ஏற்றுக் கொண்டிருந்தனர்.

இதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை உடனடியாகநடைமுறைக்குக்கொண்டுவருவதுதான் தற்போது ஏற்பட்டுள்ள தீவிரத்தன்மையை தணிக்க உதவும். ஆகவே யுத்த நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற விடயங்களை உடனடியாக நடை முறைப் படுத்தப்பட வேண்டும்.

இதில் மிகவும் முக்கியமாக எங்கள் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினை அதாவது இரண்டு தரப்பும் இணைந்து உருவாக்கிய பொதுக் கட்டமைப்பு இப்பொழுது செயலிழந்த நிலையில் உள்ளது. எங்களது தாயகப்பிரதேசத்தில் எங்கள் மக்களின் மனிதாபிமானப் பணிகளுக்கும், அதற்கான முன்னெடுப்புக்களுக்கும் சர்வதேச சமூகம் இனி இலங்கை அரசைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. உடனடியாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒரு ஏற்பாட்டைச் செய்து எங்கள் மக்களுக்கான உதவிகளைக் கொண்டுவரமுயல வேண்டும். இந்த நல்லெண்ண நடவடிக்கைகள்தான் நெருக்கடி நிலையைத் தீர்க்க ஓரளவுக்காவது உதவும் என்கின்ற சூழலை நாங்கள் இன்று தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

***போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்துக்குறித்த அரசு உங்களுக்கு யோசனைகளை அனுப்பியதாகவும் அதற்கான பதிலை நீங்கள் அனுப்பியதாகவும் கூறப்படுகிறது. அந்தப் பதிலில் நீங்கள் என்ன குறிப்பிட்டிருக்கிறீர்கள்?**

ஏற்கனவே நாங்கள் எங்களது போராளிகளின் பாதுகாப்பான பயணம்பற்றிய நடைமுறைகள் சம்பந்தமாக கண்காணிப்புக் குழுவூடாக அரசுக்கு அனுப்பியிருந்தோம். அரசு அவற்றை முழுமையாக ஏற்றுக்கொண்டு பதில் தரவில்லை. அவர்கள் ஆளணி எண்ணிக்கையை வரையறுத்தும், பயணப் போக்குவரத்தினுடைய எண்ணிக்கையை வரையறுத்தும் கட்டுப்பாடுகளைக்கொண்டு வந்த காரணத்தால் எங்கள் தலைமைப்பீடம் அதனை ஏற்கவில்லை.ஆகவே இந்தச் செய்தியை நாங்கள் கண்காணிப்புக்குழுவுக்கு அனுப்பியிருக்கிறோம்.

நேற்றுமுன்தினம் அவர்களால் ஒரு புதிய நடைமுறை அனுப்பப்பட்டுள்ளது. அது எங்கள் தலைமைப்பீடத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதில்அம்பாறை மாவட்டத்துக்கான போக்குவரத்துப் பற்றி எதுவும் குறிப்பிடப்படாததால் அது பற்றிய விளக்கத்தைக் கேட்டிருக் கிறோம். அதற்கான பதில் கிடைத்த பிறகுதான் இது பற்றி முடிவுகளைப் பெறமுடியும்.

**பொதுக்கட்டமைப்புப் பற்றிய விவகாரம் நீதிமன்றத்தில் இருந்தாலும் அதனைச் செயற்படுத்துவது பற்றிய ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது. இதில் உங்களது நிலைப்பாடுகள், கோரிக்கைகள் எதையாவது முன்வைத்திருக்கிறீர்களா?**

நாங்கள் ஒரு புதிய கோரிக்கைகளையும் முன்வைக்கவேண்டிய நிலையில் இல்லை. ஏனெனில் இந்தப் பொதுக்கட்டமைப்பு ஆறுமாதகாலமாக விவாதிக்கப்பட்டு கருத்துக்கள் பரிமாறப்பட்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஒப்பமிடப்பட்டது. ஆகவே இந்தப் பொதுக்கட்டமைப்பில் உள்ள கருத்துக்களை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் சரி.

இது இரண்டு தரப்பும் உடன்பட்டு சர்வதேச சமூகத்தின் பிரசன்னத்துடன் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு கட்டமைப்பு என்ற வகையில் எதனையும் நாங்கள் புதிதாக முன்வைக்கவில்லை.

ஆனால், பொதுக்கட்டமைப்பை உயர்நீதிமன்றம் செயலிழக்கச் செய்துள்ள நிலைமைதான் உருவாகியிருக்கிறது.

அரசாங்கம் கடந்த காலங்கள் போல் போலி வாக்குறுதிகளையோ, நடைமுறைக்கு சாத்தியமில்லாத செய்திகளை கசிய விடுவதாலேயோ எங்களது மக்கள் திருப்திப்படப் போவதில்லை. அவர்களுக்கு நடைமுறையிலுள்ள பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும்.

காலத்தை இழுத்தடித்துக் கொண்டு போவதால் எங்கள் மக்களுக்குத் திருப்தியளிக்கப் போவதில்லை. இதனை நாங்கள் அவர்களுக்குத் தெளிவு படுத்தியிருக்கிறோம்.

அண்மைக்காலமாக மாவட்டம் தோறும் எங்கள் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமது அபிலாசைகளையும், தமது பிரச்சினை, எண்ணங்களை சர்வதேச சமூகத்திற்கு வலியுறுத்தி வருகிறார்கள். அதனையும் சர்வதேச சமூகத்துக்கு தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

**வவுனியாவில் நடைபெற்ற பேராளர் மாநாட்டில் மக்கள் தீர்மானங்களை எடுத்து அதனை தமிழீழ விடுதலைப்புலிகளிடம் கையளித்திருக்கிறார்கள். இது தொடர்பில் தங்களது நிலைப்பாடு என்ன?**

இது பற்றியும் இன்று அவர்களிடம்சுட்டிக் காட்டியிருக்கிறோம். எங்களது தமிழர் தாயகத்திலுள்ள அனைத்து மக்களுமே எமது தலைமைப்பீடத் துக்கு தங்களது கருத்துக்களை சொல்லி வருகிறார்கள். அதாவது தங்களுடைய பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வு வேண்டும் என்பது அவர்களுடைய வேண்டுகோளாக இருக்கிறது. ஆகவே மக்களின் வேண்டுகோளுக்கு மதிப்பளிக்க வேண்டிய நிலையில் எங்களது தலைமைப்பீடம் இருக்கிறது. ஆகவே அண்மைக்காலமாக சர்வதேச சமூகத்துக்கு எங்கள் மக்கள் தமது நிலைப்பாடுகளை தெரிவித்து வருகிறார்கள். அதேபோல் எங்கள் தலைமைப்பீடத்துக்கும் தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தி வருகிறார்கள். இந்த நிலைப்பாட்டை அனுசரணையாளர்கள் என்ற வகையில் அவர்களுக்குதெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

***தற்போதைய அமைதி முயற்சிகளை பின்தள்ளிக் கொண்டு சனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு செயற்படுவதாகத் தெரிகிறது. இதுபற்றி?**

இது ஒரு புதிய விடயமல்ல. இலங்கைத்தீவின் அரசியல் வரலாற்றிலே தொடர்ந்து நடைபெறுகின்ற நிகழ்வு. தமிழ்பேசும் மக்கள் உரிமைகள் மறுக்கப்பட்டு தொடர்ச்சியாக துன்பப்பட்டு வருகிறார்கள். அவ்வப்போது பேச்சுக்களின் ஊடாகவும், போராட்ட ரீதியாகவும் தங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயல்கின்ற வேளைகள் எல்லாம் சிங்களதேசம் அதை உதாசீனப்படுத்தி-அதனைத் தட்டிக்கழித்து தங்களுடைய தேசத்தினதும், அரசியல் அதிகாரப் போட்டிகளிலுமேதான் கவனம் செலுத்துகின்றனர். இதுதான் வழமை. இந்த மூன்றரை வருடகாலமாக சமாதான முயற்சிகளிலும் பல கட்டங்களிலும் இதுதான் நடந்தது. ஆட்சிபீடத்திலுள்ள ஒரு அரசு பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல்வதுபோல ஒரு தோற்றப்பாட்டை உருவாக்குவதும் அதை எதிர்த்து எதிர்க்கட்சிகளும், ஏனைய இனவாதக் கட்சிகளும் இணைந்து ஆட்சியைக்கவிழ்த்து நிலைமைகளை மோசமாக்குவதும், பின்னர் ஆட்சிப் பீடத்துக்கு வந்தவுடன் எங்களது பிரச்சினைகளை இழுத்தடித்து, நிலைமைகளை மோசமாக்கி பின்னர் தமது அரசியல் அதிகாரப் போட்டிகளுக்கு போட்டி போடுகின்றதுதான் இங்கே நடைபெறும் விடயம். ஆகவே தென்னிலங்கைத் தலைவர்களோ சிங்களதேசமோ தமிழ் மக்களுக்கும், தேசத்துக்கும் ஒரு தீர்வைத்தரும் என்பதை எங்கள் மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாதநிலை உருவாகியிருக்கிறது.

அதாவது சர்வதேச பிரசன்னத்தின் அடிப்படையில் அவர்களின முயற்சியில் கூட சிங்களத் தலைமைகள் எந்த அக்கறையும் இல்லாமல் மக்களின் பிரச்சினைக்கு தீர்வை கொடுக்க அர்ப்பணிப்புடன் செயற்படாத நிலைதான் மூன்று வருடங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. சர்வதேச சமூகமும் இதை உணர்ந்து கொண்டிருக்கிறது. இதனை உணர்ந்துதான் மக்கள் சர்வதேசத்திடம் தமது நிலைப்பாட்டை எடுத்துக் கூறுகின்றார்கள்.

*** நீங்கள் 14 நாட்கள் காலக்கெடு கொடுத்தீர்கள?**

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை இரண்டு வருட காலக்கெடுவை கொடுத்தார்கள். அவர்களது போக்குவரத்து இன்று இயல்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதனைப் படைத்தரப்பு தடுக்க முற்பட்டால்தான் நிலைமைகள் மோசமடையும். ஆகவே அவர்கள் எங்கள் பயணத்தை தடுக்காது இதற்குத் தீர்வு காண்பதற்கு ஏதாவது முயற்சிகள் எடுத்திருக்கிறார்களோ தெரியவில்லை. ஆனால் கண்காணிப்புக் குழு ஊடாக எங்களுக்கு தகவல்களை அனுப்பிக்கொண்டிருக் கிறார்கள். அந்த நிலைமை சீராகுமாக இருந்தால் தற்போது எந்த நேரத்திலும் சீர்குலையும் நிலையிலுள்ள தன்மை சீர்செய்யப்படும்.

***சோதனைச் சாவடிகள் ஊடாக இல்லாமல் உங்கள் போக்குவரத்து நடைபெறுகிறது என்று சொல்கிறீர்களா?**

அப்படி இருக்கலாம் என்றுதான் நான் நம்புகிறேன்.

***சனாதிபதித்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை நிறுத்தியிருக்கிறது. இதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

எங்களைப் பொறுத்தவரையில் தெற்கின் எல்லாத் தலைவர்களையும் பார்த்துவிட்டோம். எல்லோருமே சமாதானத்தை உருவாக்குவது போன்ற தோற்றப்பாட்டை உருவாக்குவார்கள். தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண எவரும் இதுவரை அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை. அந்த நிலையில் புதிதாக வரப்போகிறவர்களோ அல்லது வந்தவர்களோ எவராலும் எங்கள் மக்களுக்கான தீர்வு வரும் என்று நாங்கள் நம்பவில்லை. அதனால் மக்களே தீர்மானம் எடுத்துவிட்டார்கள். அதற்கமைவாக மக்கள் செயற்பட்டு வருகிறார்கள் என்றார் அவர். (லோ.தீ)

## தவறிவிட்டது

02.08.2005 அன்று முறிகண்டிக்கும், கிளிநொச்சி நகருக்கும் இடையில் கற்குலேற்ரர் பொருத்தப்பட்ட கறுப்புத்தினக்குறிப்பேடு (டயறி) தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இளவேனில் வாணிபம், கிளிநொச்சி, (தொலைபேசி இலக்கம் 0212285895) அல்லது ஈழநாதம் பணிமனை என்னும் முகவரிகளுடன் தொடர்புகொள்ளவும். ஒப்படைப்போருக்குத் தகுந்த சன்மானம்
(6526)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.